விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 225 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 16 வெள்ளிக்கிழமை (01.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## உயிரியல் ஆசான் குணசீலனுக்கு 'யாழ் விருது'



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் சைவசமய விவ காரக்குழு ஆண்டுதோறும் வழங்கிவரும் யாழ்விருது இவ்வாண்டு (2025) உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன் அவர் களுக் கு 15ஆம் பக்கம் பார்க்க

## புதிதாக 3 மனித எச்சங்கள் செம்மணியில் அடையாளம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதை குழியில் புதிதாக 3 மனித எச்சங்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதை 15ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸ் சேவையில் ஆயிரம் பெண்களை நியமிக்க தீர்மானம்

(கொழும்பு)

பொலிஸ் சேவையில் 15ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் ஜனாதிபதிகளின் வரப் பிரசாதங்கள் இரத்து

### வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் வரப்பிரசாதங்களை இரத்துச் செய்வதற்கான சட்ட மூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது

இதன்படி முன்னாள் ஜனாதிபதிகளுக்கான உத்தியோகபூர்வ வீடுகள் அல்லது மாதக்கொடுப் பனவுகள் இரத்துச் செய்யப் 16ஆம் பக்கம் பார்க்க

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை

### கைதிகளின் உறவினர்களிடம் நீதியமைச்சர் ஹர்ஷ உறுதி




நீண்ட காலமாக சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார அரசியல் கைதிகளின் உறவினர்களிடம் உறுதியளித்தார். *(04ஆம் பக்கம் பார்க்க)*

## கிளிநொச்சியில் புலிகளின் ஆயுதங்களைத் தேடி அகழ்வு

### எதுவும் கிடைக்காததால் நிறுத்தம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் ஆயுதங் கள் இருக்கலாம் எனச் சந்தேகித்து மேற்கொள் ளப்பட்ட அகழ்வுப் பணியானது எவ்விதத் தடயங் களும் காணப்படாத நிலையில் இடைநிறுத்தப் பட்டுள்ளது. 15ஆம் பக்கம் பார்க்க

## பரந்தனில் டிப்பர் மோதியதில் இளம் பெண் உயிரிழப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ9 வீதி பரந்தன் சந்திக்கு அண்மையாக நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இளம் பெண் ஒருவர் உயிரிழந் துள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணிப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம்



### கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலை வர் கலாநிதி 15ஆம் பக்கம் பார்க்க

## நீர்வேலி வடக்கில் கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வடக்கில் கிணற்றிலிருந்து பெண் ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் அதே பகுதியைச் 04ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி கிழக்கில் 103 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்பு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு வத்திராயனில் 103 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள் ளது.

மேற்படி பகுதியில் 04ஆம் பக்கம் பார்க்க




## ஐக்கிய இராச்சியத்தின் இணை நாடுகள்

# ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டுவரத் திட்டம்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் தீர்மானமொன்றை நிறைவேற்றும் முனைப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருவ தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை குறித்து தொடர்ச்சி 04ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S.V.M இன் ஸ்தாபகருக்கு

# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
23 - 12 - 1923

மறைவு
16 - 08 - 2010

## அமரர் சண்முகம் விஸ்வநாதர் முருகேசு

காலம் சலனமற்று நகர்ந்தாலும், உங்கள் நினைவு என்றும் சாகாவரம் பெற்றது. S.V.M எனும் சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த மாபெரும் தலைவனுக்கு, இன்று பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி!

வியாபார உலகின் விடிவெள்ளியே, உங்கள் தூரநோக்கு பார்வையும், அசராத உழைப்பும் தான் S.V.M இன்று அடைந்திருக்கும் உயரங்களுக்குக் காரணம்.

வர்த்தக உலகில் நீங்கள் வகுத்த பாதைகள் பல; தன்னம்பிக்கை விதைகளையிட்டு, திறமையால் பல விருட்சங்களை உருவாக்கிய சிற்பி நீங்கள்.

வெறும் கற்களை அடுக்காமல், கனவுகளுக்கு உயிர் கொடுத்தீர்கள். ஒவ்வொரு அடியிலும் புதுமையை புகுத்தி, வர்த்தக உலகில் S.V.M ஐ தனித்துவமாக்கினீர்கள்.

இன்று உங்கள் பெயரைச் சொல்ல பல நிறுவனங்கள் தலை நிமிர்ந்து நிற்கின்றன; உங்கள் உழைப்பின் மகத்துவத்தை அவை உலகிற்கு உணர்த்துகின்றன.

நீங்கள் விதைத்த ஒவ்வொரு விதையும், இன்று பெரும் விருட்சமாய் உயர்ந்து நிற்கிறது. உங்கள் தூரநோக்கு சிந்தனையும், அர்ப்பணிப்பும் தான் அதன் ஆணிவேர்.

சாதனைகளைத் தேடிய நீங்கள், தடைகளைக் கண்டதில்லை. உங்களது கடுமையான உழைப்பும், அபாரமான துணிச்சலும், இன்றும் பலருக்குப் பாதையாக இருக்கிறது.

நீங்கள் ஏற்றிய தீபம், இன்றும் S.V.M இன் பாதையை பிரகாசமாக்குகிறது. பலரின் வாழ்வில் ஒளியேற்றி, வளங்களைச் சேர்த்த வள்ளலே, உங்கள் புகழ் என்றென்றும் நிலைக்கும்.

நீங்கள் கண்ட கனவுகள், இன்று நிஜமாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. S.V.M உங்கள் பெயர் சொல்லும் நிறுவனங்கள், தலைநிமிர்ந்து நிற்கின்றன, உங்கள் பெருமையை பறைசாற்றுகின்றன.

மரணத்தால் உங்கள் உடல் மறைந்தாலும், S.V.M இன் ஒவ்வொரு வெற்றியிலும், உங்கள் ஆத்மா வாழ்கிறது. உங்கள் ஆன்மா சாந்தியடையட்டும்!

**S.V.MURUGESU**
IMPORTERS, GENERAL MERCHANTS & CONSIGNMENT AGENT
NO.154,HOSPITAL ROAD, JAFFNA.
EMAIL : svmmurusugunaratnam&yahoo.com
TEL : 021-4925831/0212228899
FAX : 021-2228899

**S.V.M (PVT) LTD**
NO.122, DAM STREET, COLOMBO-12
TEL : 011-4378678, 011-2424392
FAX : 011-2424391
Svm-sugar&hotmail.com

**S.V.M ENTERPRICES (PVT) LTD**
No.288, A9 Road, Caradipokku, Kilinochchi.

**S.V.M FUEL MART**
No.173, 175, Palay Road, Thirunelvely.

**S.V.M RICE MILL**
Power House Road, Chunnakam.

(C-3542) உரிமையாளர்களும் ஊழியர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் வெப்பநிலையால் தோல் நோய்கள் ஏற்படலாம்



## அதிக நீர் அருந்துமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

**இலங்கையில் நிலவும் வெப்பமான வானிலை காரணமாக நீர்ச்சத்து குறைபாடு மற்றும் தோல் நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக சிறுவர் நோய் விசேட வைத்தியர் தீபால் பெரேரா எச்சரித்துள்ளார்.**

இதைத் தடுக்க, பொது மக்கள் போதுமான தண்ணீர் மற்றும் இயற்கையான நீர் ஆகாரங்களை உட்கொள்ள வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை “அவதானம்” மட்டத்தில் இருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் வெப்பமான வானிலை “எச்சரிக்கை” மட்டத்தில் தொடரக்கூடும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# 3 வருடங்களில் 20 ஆயிரம் மாணவர்கள் இடைவிலகல்

## பிரதமர் ஹரிணி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கற்றல் நடவடிக்கைகளில் இருந்து கடந்த மூன்று வருடங்களில் 20 ஆயிரம் மாணவர்கள் இடைவிலகினர் என்று கல்வி உயர்கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

புதிய கல்வி மறுசீரமைப்பு யோசனைகள் தொடர்பாக அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் கூட்டம் ஒன்று குருநாகலில் நடைபெற்றது. இதில் கருத்து வெளியிட்ட போதே பிரதமர் ஹரிணி அமரசூரிய மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாளாந்தம் பாடசாலை நேரத்தில் 50 வீத மாணவர்களே வகுப்பறையில் இருக்கின்றனர்.

அடுத்த வருடத்தில் தரம் ஒன்றுக்கு தரம் 6 இற்கும் புதிய பாட விதானங்களை அறிமுகப்படுத்தப்படும்.

இதன் மூலம் புதிய இலக்குகள் அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது என ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (நி)

# கைவிடப்பட்ட அரச கட்டடங்களை பல்கலை விடுதிகளாக மாற்ற தீர்மானம்

(கொழும்பு)

கைவிடப்பட்டுள்ள அரச கட்டடங்களை பல்கலைக்கழகங்களுக்கான விடுதிகளாக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக தனியார் துறையினருடன் இணைந்து விடுதிக்கான கட்டடங்களை நிர்மாணிக்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கல்வி பிரதியமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன தெரிவித்தார். அரசாங்கத்தால் கைவிடப்பட்டுள்ள கட்டடங்களை அடையாளங்காணும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருவதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், பல்கலைக்கழங்களிலிருந்து தூரப்பகுதிகளில் காணப்படும் விடுதிகளுக்கான போக்குவரத்து திட்டங்களை துறைசார் அமைச்சுடன் இணைந்து முன்னெடுத்துவருவதாகவும் கல்வி பிரதிய மைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன மேலும் குறிப்பிட்டார். (நி)


Errances KMS

மாபெரும் நடனப்போட்டி



எரிபொருள் நிரப்பு நிலையம் – முகமாலை
எரான்ஸ் ட்ராவல்ஸ் விமான ரிக்கட் முகவர் – யாழ்ப்பாணம்
நட்சத்திரமஹால் திருமண மண்டபம் – கொடிகாமம்
இணைந்து வழங்கும்



“நட்சத்திர நர்த்தன சங்கமம் – 3”

“வசதியற்ற குடும்பங்களின் வாழ்வாதாரம், தொழில்விருத்தி என்பவற்றிற்காக”

இடம் :- நட்சத்திரமஹால் திருமண மண்டபம் (A9 வீதி, கொடிகாமம், யாழ்ப்பாணம்)
காலம் :- 20.09.2025 (சனி), 21.09.2025 (ஞாயிறு)

கீழ்ப்பிரிவு:
கிராமிய நடனம் (10–14 வயது)
கோலாட்டம், கும்மி, கரகம், தாளம்)
மத்திய பிரிவு:
Fusion Dance (15–17 வயது)
எமது கலாசாரங்களை உள்ளடக்கியதாக சமூகத்திற்கு நற்செய்திகளை கூறுவதாக அமைதல் வேண்டும்
மேற்பிரிவு:
பரதநாட்டியம் (16–22 வயது)
“கீர்த்தனம்”

ஒவ்வொரு குழுவிற்கும் பரிசுத்தொகை
1 ஆம் பரிசு 100 000/=
2 ஆம் பரிசு 75 000/=
3 ஆம் பரிசு 50 000/=

- ஒவ்வொரு குழுவிலும் 05–08 மாணவர்கள் பங்குபற்ற முடியும், இருபாலரும் ஒரு குழுவாக பங்கு பற்றலாம்.
- ஒவ்வொரு நடனமும் 05 –08 நிமிடங்கள் வரை அமைதல் வேண்டும்
- இலங்கையின் எப்பிரதேசத்தில் இருந்தும் பங்குபற்ற முடியும். 20.09.2025 திகதி வயதெல்லைகள் கணிக்கப்படும். [நிகழ்வு நடைபெறும் அன்று பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பரிசீலிக்கப்படும்.]
- பெறுமதியான பரிசில்கள் ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கப்படும். பங்கு பற்றிய குழுக்கள் அனைத்திற்கும் பணப்பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.
- பக்க வாத்தியங்கள் நேரடியாகவோ, ஒலிநாடா மூலமாகவோ செய்ய முடியும். அதற்குரிய செலவுகள் வழங்கப்படமாட்டாது.
- 2000/– கட்டுப்பணம் செலுத்தி பதிவு செய்ய வேண்டும்.

தொடர்புகளுக்கு: 077 999 2304 (நிகழ்ச்சி விபரங்கள்) 077 778 0730
077 105 7593 (விண்ணப்பபதிவுகள்) 0033 69 023 5950
077 037 2757

விண்ணப்ப முடிவுத்திகதி 20.08.2025

(சி-3539)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக டெஸ்ட் தொடரில் இலங்கை வீரர் சாதனை




உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் வரலாற்றில் 1000 ஓட்டங்களைக் கடந்த துடுப்பாட்ட வீரர்களில், அதிக சராசரியைக் கொண்ட துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் இலங்கை அணியின் கமிந்து மெண்டிஸ் முதலிடத்தில் உள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவை இதனை அறிவித்துள்ளது. கமிந்து மெண்டிஸின் துடுப்பாட்ட சராசரி 62.67ஆக காணப்படுகின்றது.

இவருக்கு அடுத்தபடியாக நியூ சிலாந்து அணியின் கேன் வில்லியம்சன் 61.34 என்ற சராசரியில் இரண்டாவது இடத்திலும், இங்கிலாந்து வீரர் ஹரி புரூக் 53.80 என்ற சராசரியுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

அத்துடன் குறித்த வரிசையில் இங்கிலாந்து வீரர்களான ஜேமி ஸ்மித் மற்றும் ஜோ ரூட் ஆகியோர் முறையே நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட்; ஜிம்பாவே 149 ஓட்டங்களுடன் ஆட்டமிழப்பு




ஜிம்பாப்வேக்கு சென்றுள்ள நியூ சிலாந்து கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடுகிறது.

இதன் முதலாவது டெஸ்ட் போட்டி புலவாயோவில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜிம்பாப்வே, நியூ சிலாந்தின் வேகப்பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் முதல் இன்னிங்சில் 60.3 ஓவர்களில் 149 ஓட்டங்களுடன் சுருண்டது. அதிக பட்சமாக கப்டன் கிரேக் எர்வின் 39ஓட்டங்கள் எடுத்தார். நியூ சிலாந்து தரப்பில் வேகப் பந்து வீச்சாளர்கள் மேட் ஹென்றி 6 விக்கெட்டும், நாதன் சுமித் 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் தனது முதல் இன்னிங்சை ஆடிய நியூசிலாந்து அணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 26 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 42 ஓட்டங்கள் எடுத் துள்ளது. வில் யங் (41 ரன்), டிவான் கான்வே (51 ரன்) ஆகி யோர் ஆட்டமிழக்கமால் உள்ளனர். (3)

## ஐ.நாவில்...

யாக நடவடிக்கைகள் எடுக்கும்நோக்கில் ஐக்கிய இராச்சியம் தலைமையிலான இணை நாடுகள் குழு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் புதிய தீர்மானத்தை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முக்கிய நாடுகள் குழுவில் ஐக்கிய இராச்சியம் தவிர கனடா, மாலாவி, மான்டேனிக்ரோ மற்றும் வட மாசிடோனியா ஆகிய நாடுகள் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் UNHRC, இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தும் நோக்கில் 51/1 தீர்மானத்தின் ஆணையை நீடித்து தீர்மானம் நிறைவேற்றியது. இந்நிலையில் இலங்கையின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதனை நிராகரித்திருந்தது. இதற்கு முன் 46/1 தீர்மானத்தின் கீழ் ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையகத்தில் வெளிப்புற ஆதாரச் சேகரிப்பு பொறிமுறைமையையும் இலங்கை அரசாங்கம் நிராகரித்திருந்தது.எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் ஐக்கிய இராச்சியம் இலங்கை தொடர்பிலான புதிய தீர்மானம் நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் லண்டனில் இருந்த போது பிரித்தானிய அதிகாரிகளிடமிருந்து இதுபற்றி அறிந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய தீர்மானத்தின் காலாவதித் திகதி செப்ரெம்பரில் முடிவடைகின்றது.

இதனைத் தொடர்ந்து மீதமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகப் புதிய தீர்மானம் முன்வைக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## தமிழ் ...

கொழும்பு நீதி அமைச்சின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்காரவை, குரலற்றவர்களின் குரல் அமைப்பின் பிரதிநிதிகள், சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சந்திப்பின் போது கடந்த 15 முதல் 30 வருடங்களாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்ப உறுப்பினர்கள், தங்கள் உறவினர்களின் நீண்டகால சிறைவாசம் காரணமாக தாங்கள் எதிர்கொண்ட உளவியல், சமூக மற்றும் பொருளாதார சவால்களைக் கண்ணீருடன் எடுத்துரைத்தனர்.

தங்களின் அன்புக்குரியவர்களை விரைவாக விடுதலை செய்யுமாறு அமைச்சரிடம் கூட்டாக கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் இலங்கையின் இன முரண்பாடுகளால் உருவான போரின் விளைவுகளான தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காண்பது அவசியமாகும்.

கடந்த காலத்தில் இலங்கை - இந்திய ஒப்பந்தம், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள், ஜே.வி.பி.க்கு பொது மன்னிப்பு மற்றும் போருக்கு பின்னர் 12 ஆயிரம்விடுதலைப் புலிகள் விடுவிக்கப்பட்டமை போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது .

இந்த வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு பல வருடங்களாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளில் விடுதலையினை மனிதாபிமான ரீதியில் முன்னெடுக்குமாறு குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை முன்வைத்தது.

மேலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஊடாக கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

நீதி அமைச்சர் ஹர்ஷ நாணயக்கார கோரிக்கைகளை, தான் "காதுகளால் கேட்கவில்லை, இதயத்தால் கேட்கிறேன்" என்று குறிப்பிட்டு சட்ட கட்டமைப்பிற்குள் இருந்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அரசியல் கைதிகளின் உறவினர்களிடம் உறுதி அளித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் பொது மன்னிப்புச் சார்ந்த விடயங்கள் ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற மையால் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்று தொடர்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சர் உறுதியளித்தார். (ம-7,33,104)

## கிணற்றிலிருந்து ...

சேர்ந்த அருந்தவரத்தினம் சத்திய ஞானதேவி (வயது- 70) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அவர் நோயின் வீரியம் தாங்க முடியாது கிணற்றில் விழுந்து உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

## 103 கிலோ ...

கஞ்சா கடத்தப்படுவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து நேற்று வியாழக்கிழமை(31) அதிகாலை கரவெட்டியில் உள்ள விசேட அதிரடிப்படையினர் மேற்படி பகுதியில் சோதனை நடத்தினர்.

இதன் போது 54 பொதிகளில் இருந்த 103 கிலோ கஞ்சா மீட்கப்பட்டு மருதங்கேணி பொலிஸில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மருதங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60,316)


### சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### வெளிவாரி ஆட்சேர்ப்பு விண்ணப்பம் கோரல்

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ்வரும் பதவிகளுக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

வயது எல்லை 18 - 45 வரை. (கூட்.சங்கங்களில் பணிபுரியும் நிரந்தர நியமனம் பெற்ற பணியாளருக்கு வயது எல்லை பார்க்கப்படமாட்டாது) என்பதுடன் கூட்டுறவு சங்க பணியாளர் தங்களின் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

01. பதவி- களஞ்சிய முகாமையாளர். வெற்றிடம் - 01
குறியீட்டு இலக்கம் : 208/13
சம்பள அளவுத்திட்டம்: 33360-360×10-370×10-40660
400320-4320×10-4440×10-487920 (02/2025 சுற்று நிருபம்), ஏனைய கொடுப்பனவுகள் கூட்.ஊழி.ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கு அமைய வழங்கப்படும்.

தகைமைகள்

அ.கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/
கூட்டுறவு ஊழியா 15 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/
அல்லது
ஆ.கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் சித்தி!
கபொத சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் உட்பட 3 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி

02. பதவி:- சாரதி, வெற்றிடம் 01
குறியீட்டு இலக்கம் :312/13
சம்பள அளவுத்திட்டம் : 33360-360x10-370x10-40660
400320-4320x10-4440x10-487920 (02/2025 சுற்று நிருபம்), ஏனைய கொடுப்பனவுகள்கூட்.ஊழி-ஆணைக் குழு சுற்றுநிருபத்திற்கு அமைய வழங்கப்படும்.

தகைமைகள்.

அ. 05 ஆம் தரக் கல்விச் சான்றிதழுடன் பேருந்து/லொறி/பெட்டியுடன் கூடிய உழவு இயந்திர சாரதி அனுமதிப் பத்திரத்துடன் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களினை சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் கிழமை நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தகைமைச் சான்றிதழ்களின் போட்டோப்பிரதிகளுடன் 15.08.2025 ஆம் திகதிக்கு முன்னர் "தலைவர், சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம்" எனும் முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர்,
சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லை. களமோட்டையில்

# பாலமின்மையால் விவசாயிகள் அவதி

(நெளுக்குளம்)

**முல்லைத்தீவு - முள்ளியவளை கமநலசேவை நிலைய பிரிவிலுள்ள மதவளசிங்கன் குளத்தின் கீழுள்ள களமோட்டை பகுதி வயல்நிலங்களுக்கு ஆற்றைக் கடந்து செல்வதற்கான பாலம் இன்மையால் விவசாயிகள் பெருத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.**

களமோட்டைப்பகுதியில் 220 ஏக்கர் வயல் நிலங்களில் பெரும்போகம் மற்றும் சிறுபோக நெற்பயிற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் குறித்த களமோட்டை வயல்பகுதிக்கு செல்லும் வழியின் குறுக்கே உள்ள ஆற்றைக் கடந்து செல்வதற்கு பாலமொன்று இன்மையால் நெற்பயிற்செய்கைக் காலத்தில் நிலப்பண்படுத்தலுக்கு உழவியந்திரத்தை கொண்டு செல்லுதல், விவசாய உள்ளீடுகளை எடுத்துச்செல்லுதல், விவசாய நிலங்களுக்கான காவலுக்குச் செல்லுதல், அறுவடைக்காலத்தில் அறுவடை இயந்திரத்தைக் கொண்டுசெல்வது, அறுவடையை எடுத்துச்செல்வது உள்ளிட்ட பல சந்தர்ப்பங்களில் விவசாயிகள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை சில சந்தர்ப்பங்களில் 35 அடி தூரமான ஆற்றைக் கடப்பதற்குப் பதிலாக 15 கிலோமீற்றர் சுற்றியே தமது விவசாய நிலங்களுக்கு செல்ல வேண்டிய அவலநிலையை களமோட்டைப் பகுதியில் நெற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையில் விவசாயிகளின் கோரிக்கைக்கமைய நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்ட வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறித்த ஆற்றுப்பாலத்தை அமைப்பது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படுமெனத் தெரிவித்திருந்தார்.(8-299)


**லங்கா மஹால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

(1379)

UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

தொடர்புகளுக்கு

**077 839 3974, 076 889 1308**


# INVITATION FOR BIDS (IFB)
# IFB NO : 2025 / 05
# VELANAI PRADESHIYA SABHA, VANGALAVADY JUNCTION, VELANAI.

1. The **Chairman, Divisional Procurement Committee,** on behalf of the Velanai Pradeshiya Sabha Invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-08-01 To 2025-08-14** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman / Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. (T.P No: 021 221 1506, Fax No: 021 221 1506) **from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman / Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai.**on or before 10.30 a.m as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall**, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. commencing at **11.00 A.M as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | Document Issuing/Purchasing Period | | | From 2025-08-01 To 2025-08-14 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 11.00 A.M on 2025-08-07 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 2025-08-15 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(18)/02/Tourism/01/ 2025 | Improvement Of Tourist Facilities at Chaddy Beach in Mankumpan | 4.24 | 84 | C8 or above in Building Construction | 1500.00 | 43000.00 | 31-10-2025 | 03-10-2025 |

(C-3541)

Chairman,
Divisional Procurement Committee (DPC)
Velanai Pradeshiya Sabha, Vangalavady junction,Velanai.

01.08.2025

# இராசிபலன்

01.08.2025
ஆடி 16,வெள்ளிக்கிழமை
அட்டமி முழுவதும்
சுவாதி பின்னிரவு 4.39 மணிவரை

சுப நேரம் 6.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
சுந்தரர் குருபூசை

சந்திராஷ்டமம்
ரேவதி.

**வளவன்**

**மேஷம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கையானை வழிபட வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், பணத்தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** குடும்பப் பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.

**ரிஷபம்** வழிபாட்டால் ஆர்வம் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**சிம்மம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும், நினைத்த காரியங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, மனை சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்** காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், உறவினர் வருகையுண்டு, சுப விரயங்கள் சற்று அதிகரிக்கும்.

**கும்பம்** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பொது வாழ்வில் புகழ்கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** குடும்பத்தினரிடம் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகலாம்.

**தவிர்க்கப்படும் கடமை தள்ளிப் போடப்படும் கடனாகும்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவ கால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங் கலைஞர் மன்றமும் நல்லூ ர் துர்க்காதேவி மணிமண்டப மும் இணைந்து வழங்கும் 'தெய்வீக இசையரங்கு' இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத் தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் குழலிசை யில் புல்லாங்குழல்- சி.கஜ வதனன், வயலின்-இ.நிறோ சன், மிருதங்கம்-ம.லோகேந் திரன், கெஞ்சிரா- அ.சண்மு கப்பிரியன் ஆகியோர் நிகழ்த் தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள இசையர ங்கு நிகழ்வில் பாட்டு-திரு மதி.கேதீஸ்வரி யசோதரன், வயலின்-கே.வேலதீபன், மிரு தங்கம்-ப.விக்னேஸ்வரன், கெஞ்சிரா- ப. சாரங்கன், கடம்- சு. கார்த்திகன் ஆகி யோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

# ஆடிவேல் ரதபவனி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்கா மம் தேவஸ்தான 2025 ஆம் ஆண்டின் வருடாந்த மகோ ற்சவம் நடைபெற்று வருகி ன்றது. எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி சனிக்கி ழமை மாலை 5.30 மணிய ளவில் எம்பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராத னைகள் நடைபெற்று தொடர் ந்து எம்பெருமானின் தீர்த்த உற்சவத்திற்கு விசேடமாக அமைக்கப்பட்ட தீர்த்தக் கொட் டகையில் தீர்த்த உற்சவம் நடைபெறும்.

மறுநாள் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 05.30 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் பூசைகளும் நடைபெற்று தொடர்ந்து எம்பெருமான் விசேடமாக அலங்கரிக்கப் பட்ட ஆடிவேல் ரதத்தில் எழுந் தருளி ஆடிவேல் ரதபவனி யாக சட்டநாதர் வீதியைச் சுற்றி வரவுள்ளார்.இதன்போது பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளதென ஆலய தர்மக ர்த்தா சிவஸ்ரீ.செள.மதன குமாரக் குருக்கள் அறிவித்து ள்ளார். (ஙி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 200 | 250 | 280 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 250 | 300 | 300 |
| தக்காளி | 180 | 200 | 150 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 300 | 200 |
| கோவா | 250 | 250 | 300 | 250 | 300 |
| கரட் | 320 | 400 | 350 | 350 | 400 |
| பூசணி | 100 | 140 | 100 | 100 | 80 |
| புடோல் | 100 | 100 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 150-350 | 350 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 120 | 120 | 140 |
| பாகற்காய் | 300 | 350 | 350 | 500 | 500 |
| வெண்டக்காய் | 100 | 100 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 300 | 200 | 280 | 350 |
| பயற்றங்காய் | 200 | 300 | 100 | 300 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 150 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 250 | 140 | 200 |
| கறிமிளகாய் | 600 | 500 | 600 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 700 | 600 | 350 | 600 |
| போஞ்சி | 400 | 750 | 800 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 250 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 100-120 | 150 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 150 | 120-200 | 130-180 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 500 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 350 | 250 | 500 |
| முள்ளங்கி | 150 | 100 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 120 | 200 |

# கலா ரசனா - சங்கமம் கோடை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர் மற்றும் தாயகத்தைச் சேர்ந்த புதிய தலைமுறையினரின் கலை ஆளுமையை விருத்தி செய்யும் முகமாக "கலாரசனா- சங்க மம்-கோடை 2025 நிக ழ்வு நாளை சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங் களும் மாலை 4.30 மணியளவில் திருவள்ளுவர் கலாச்சார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது குரலிசை மற்றும் நடன அரங்கம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

முதல் நாளான சனிக் கிழமை நுண்கலைமானி மதுஷிகன் ஜெகதீஸ்வரனின் குரலிசை நிகழ்வும் நுண்கலை மானி ஆதித்தியா ஜெயபால னின் நெறியாள்கையில் 'நர்த்தன மாலை' எனும் நடன அரங்கு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை "இசை சாகரம்" மாணிக்கம் யோகேஸ்வரனின் குரலிசை நிகழ்வும் மிதுனன் ரவீந்திர னின் பாரம்பரிய நடன அரங்கு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (3)

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

ஒட்டுமடத்தைச் சேர்ந்த அமரர்களான ச.நடராசா, ந.இரத்தினம் ஆகியோ-ரின் ஞாபகார்த்தமாக அவர் களின் குடும்ப உறவுகளின் அனுசரணையுடன் ஆறு கால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் அறிவொளி முன்பள்ளி சிறா ர்களின் 'செயற்பட்டு மகிழ் வோம்' நிகழ்வு நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை பிற் பகல் 2 மணிக்கு அறிவொளி சனசமூக நிலையத்தலைவர் சி.க. தம்பிராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வண.ஸ்ரீ வைத் திலிங்கம் வித்தியாலய அதிபர். இ. ராஜ்கரன் கலந்து கொள் ளவுள்ளார். (3)

(யாழ்ப்பாணம்)

சர்வசக்தி முன்பள்ளி வருடா ந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி முன்றலில் இடம்பெறவுள்ளது.

சர்வசக்தி சனசமூக நிலையத் தலைவர் ம. பிரசாந்து தலை மையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தின ராக யா/ஊரெழு கணேசா வித்தியாசாலை அதிபர் இரா.ஜெயக்குமார், சிறப்பு விருந் தினராக ஜெ/267 ஊரெழு கிழக்கு கிராம சேவையாளர் ம.ஞானேந்திரன், கௌரவ விருந்தினர்களாக கிராம சேவையாளர் திருமதி பிர தாப் தேனுஜா,தெல்லிப்பளை அபிவிருத்தி உத்தியோகத்தர்திரு மதி. அனஸ்ரீன் கிருஷா மற்றும் கோப்பாய் அபிவிருத்தி உத்தியோ கத்தர் செல்வி உதயகுமார் பகீத் தனா ஆகியோரும் கலந்து கொள் ளவுள்ளனர். (3)




## கா! நல்லைக் குமரேசனே

இல்லாத பொருளொன்று மில்லைநீ யில்லாமல்
எல்லாமும் நீயல்லவோ
நல்லர்க்கு மல்லர்க்கும் வல்லர்க்கும் மில்லர்க்கும்
நடுநிற்கும் ஞானனலவோ
கல்லாரும் கற்றவரும் கொற்றவரும் மற்றவரும்
கதியென்றுன் காலில்வீழ்ந்தால்
பொல்லாத விடர்யாவும் சொல்லாமல் மாற்றுவான்
பொழில்நல்லைக் குமரேசனே!

**கலாபூஷணம்,**
**சந்தக்கவிஞர். நவ. பாலகோபால்.**

## நல்லூரில் கண்டால் முக்தி

ஆதிசக்தி அம்பிகை சிவபாலனுக்கு
அளித்த வேல்
சூரபதுமனின் ஆணவம்
நீக்கிய வேல்
சித்தர்களும் யோகியர்களும் அனுதினமும்
துதிக்கும் வேல்
மாருதப்புரவீகவல்லி குதிரை முகம் நீங்க
வணங்கிய வேல்
கந்தர்வன் ஐராவசுவிற்கு ஞானம்
கொடுத்த வேல்
மருதர் கதிர்காமர் வாய்கட்டிப்பூசை
செய்த வேல்
நல்லூர் திருவீதியில் பவனி வரும்
அலங்காரவேல்
அதனைக் கண்டாலே முக்தி இந்த
மானிலத்தே.

**சண்முகலிங்கம் சஜீலன்**
**பன்னாலை,தெல்லிப்பழை.**

## அலங்காரா!

நல்லைப்பதியினில் வீற்றிருக்கும் வேலனே!
நாம் உமை நாடி வந்தோம் நித்தமும்
நீர் எமக்கு நல்லருளை தந்திடுவாய் தினமும்
வேல் வடிவில் நமை எல்லாம் ஈர்த்தவனே
அலங்கார கந்தன் எனும் பெயர் பெற்றவனே
நான் உனை எப்போதும் துதித்துக்
கொண்டிருப்பேன் வேலனே!

**பிரதீபன் பிரணவி,**
**நாயன்மார்கட்டு,நல்லூர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1000 அஞ்சல் உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய ஒப்புதல்

(கொழும்பு)

ஆயிரம் அஞ்சல் உதவியாளர்களின் சேவைகளை நிரந்தரமாக்கவும், 1000 புதிய அஞ்சல் உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்யவும் ஒப்புதல் வழங்கப்பட்டதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இலங்கை தபால் திணைக்களத்தின் மத்திய அஞ்சல் பரிமாற்ற சேவைகளை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆய்வு செய்தார்.

அதன்பின் அவர் கருத்து தெரி விக்கையில் சீன மக்கள் குடியரசின் நன் கொடையாகப் பெறப்பட்ட மத்திய அஞ்சல் பரிமாற்ற கட்டடத்தை நவீனமயமாக்குவதற்கு சீனத்தூதுவருடன் கலந்துரையாடவுள்ளதாகவும், தபால் திணைக்களத்தின் பணியாளர் பற்றாக்குறை மற்றும் போக்குவரத்து சிக்கல்களைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தபால் திணைக்களத்தை நவீனமயமாக்கி, வாடிக்கையாளர் திருப்தியை உறுதி செய்யும் வகையில் புதுமையான, திறமையான சேவைகளை வழங்குவது இலக்கு எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மத்திய அஞ்சல் பரிமாற்றத்தின் மாதாந்த வருமானம் 277 மில்லியன் ரூபாயாக உள்ளதாகவும், இதில் 200 மில்லியன் ரூபாய் கடித பரிமாற்றத்தின் மூலம் கிடைப்பதாகவும், நவீன தொழில்நுட்பத்துடன் கூரியர், பொதி மற்றும் மின்னஞ்சல் சேவைகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை கண்காணிப்பாளர் மனோஜனி நாணயக்கார சுட்டிக்காட்டினார். (நி)

# மீனவர்களுக்கான புதிய காப்பீட்டுத் திட்டம்

(கொழும்பு)

உப்பு நீர் மற்றும் நன்னீரில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களுக்கான வாழ்வாதாரமாக வேளாண்மை மற்றும் விவசாயக் காப்பீட்டு சபையினால் விசேட காப்பீட்டுத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த காப்பீட்டுத் திட்டமானது பாதகமான வானிலை காரணமாக ஏற்படக்கூடிய உயிரிழப்பு அல்லது பிற எதிர்பாராத நிகழ்வுகள் அல்லது மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது ஏற்படக்கூடிய ஏதேனும் விபத்துக்கு எதிராக காப்பீட்டுத் திட்டத்தை வழங்குகிறது.மீன்பிடி நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்கும்போது கூட, விபத்து களால் ஏற்படும் இறப்புகள் அல்லது பிற குறைபாடுகளுக்கு சலுகைகள் வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.இதன் கீழ் 2000 ரூபா என்ற வருடாந்த காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், திடீர் மரணம் ஏற்பட்டால் 12 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும்.

அத்தோடு, விபத்தின் காரணமாக ஒரு கண் இழப்பு, ஒரு மூட்டு இழப்பு மற்றும் முழுமையான பேச்சு இழப்பு போன்ற விடயங்களுக்காக மிக விரைவாக இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
## உப அலுவலகம் - உரும்பிராய்
## ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்
## வட்டாரம் - 04, அம்மன் வீதி, ஆதன இல - 30/24

யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04, அம்மன் வீதி, ஆதன இல: 30/24 எனும் ஆதனத்தின் சொந்தக்காரராக சண்முகக்குருக்கள் லட்சுமியம்மா என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தினை உரும்பிராய் மேற்கு உரும்பிராய் வைத்தீஸ்வரக்குருக்கள் சபாரத்தினக்குருக்கள் என்பவர் நொத்தாரிசு திரு கதிரேசு சிவசுப்பிரமணியம் என்பவரால் 2918 ஆம் இலக்க 2004.03.19 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம், குறித்த ஆதனம் தனது மூதாதையர் சண்முகக்குருக்கள் நாகரத்தின அம்மாளுக்கு சொந்தமாக இருந்து அவரின் பின் அவரின் சகோதரரான அப்புக்குட்டி ஐயர் வைத்தீஸ்வரக்குருக்களுக்கு சொந்தமாக இருந்து அவர் தனது மகனாகிய வைத்தீஸ்வரக்குருக்கள் சபாரத்தினக்குருக்களுக்கு அறுதி உறுதி மூலம் ஒப்படைக்கப்பட்டது என்றும் குறித்த சபாரத்தினக்குருக்கள் தான் குறித்த ஆதனத்திற்கான உறுதி ஆவணம் நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தின் போது இழந்துவிட்டேன் என்றும் குறித்த ஆதனம் சம்பந்தப்பட்ட ஆவணங்களின் பிரதிகளைக்கூட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் தேடி எடுக்க இயலவில்லை என்றும் வெளிப்படுத்தி இவ்வாதனம் தனக்கு தங்கு தடையற்ற 40 வருடங்களுக்கு மேற்பட்ட ஆட்சியில் உள்ளதென்றும் ஆட்சி உரிமைச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவும் இவ்வாதனத்தின் உரிமையாளர் தானே என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் வைத்தீஸ்வரக்குருக்கள் சபாரத்தினக்குருக்கள் என்பவர் நொத்தாரிசு க. சிவசுப்பிரமணியம் என்பவரால் எழுதப்பட்ட 3168 ஆம் இலக்க 2004.07.09 ஆம் திகதிய முதுச நன்கொடை உறுதி மூலம் அவரது மகனான சபாரத்தினக்குருக்கள் பரமேஸ்வரக்குருக்கள் மறுநாமம் பரமேஸ்வரன் அவர்களிற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை :**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் கிழக்குப் பகுதி, கோப்பாய் கோவிற்பற்று, உரும்பிராய் இறையில் அமைந்துள்ள "பரத்தைப் புலம்" நில.பர. 02 இது தற்கால அளவுப்படியும் ஆட்சிப்படியும் நிலப்பரப்பு 01 குழி 16.90ம் அதைச் சேர்ந்தவைகளும்,

இதற்கு எல்லைகள்:-

| | |
|---|---|
| கிழக்கு | : அப்பாத்துரை கருணாகரஐயரின் உரிமைக்காரரின் ஆதனம் |
| வடக்கு | : 4 1/2 அடி அகல வழிவாய்க்கால் |
| மேற்கு | : மகேந்திரா பெண் அன்னலட்சுமியின் ஆதனம் |
| தெற்கு | : ஒழுங்கை இதடங்கலும் |

இன்னும் மேற்கெல்லைக் காணியின் வடமேற்கு எல்லையில் உள்ள கிணற்றில் அரைவாசியில் இதற்குரிய பங்கும் அதைச் சேர்ந்தவைகளும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்

தற்போது இவ் ஆதனத்தினை சபாரத்தினக்குருக்கள் பரமேஸ்வரக்குருக்கள் மறுநாமம் பரமேஸ்வரன் என்பவர் ஆதனப் பதிவேட்டில் தனது பெயரிற்கு மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் எமக்கு அறியத்தர முடியும். ஆட்சேபனைகள் எவையும் கிடைக்கப் பெறாதவிடத்து அல்லது யாரேனும் உரிமை கோராதவிடத்து, குறித்த ஆதனமானது **"சபாரத்தினக் குருக்கள் பரமேஸ்வரக்குருக்கள் மறுநாமம் பரமேஸ்வரன்"** என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ் ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளுக்கும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்.**

(4937)

## காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
## அல்வின் வீதி காரைநகர்
## பதவி இலக்கமும் திகதியும் : J/22 - 15.09.1999

**பதவி வெற்றிடம்**

1. பதவி - பொதுமுகாமையாளர்
சம்பளக் குறியீடு - 101/08
சம்பள அளவுத்திட்டம் - 35665-460-10-480×10-45065 (கூட்டுறவு ஊழியர்ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைய இதரபடிகளும் வழங்கப்படும்.

(02/2025 இன் படி)

வெற்றிடம் - 01
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ. கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் /அதற்குச் சமமான தகைமை இத் தகைமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளி விபரவியல் / வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். /

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் /அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/

க.பொ.த. உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05ஆண்டு கால அனுபவம்./

2. பதவி - அலுவக உதவியாளர்
சம்பளக் குறியீடு - 317/17
சம்பள அளவுத்திட்டம் -31515-330X10-345X10-38265 (கூட்டுறவு ஊழியர்ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைய இதரபடிகளும்வழங்கப்படும்)

(02/2025இன்படி)

வெற்றிடம் - 01
அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம்./
08 ஆம் தர கல்விச் சான்றிதழ்

ஏனைய விபரம்

1) வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிவோருக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.)
2) சங்கம் கோருகின்ற ரொக்கப்பிணை, ஆதனப் பிணை என்பவற்றினை தெரிவு செய்யும் பணியாளர் செலுத்துதல் வேண்டும்
3) சங்கங்களில் பணிபுரிவோர் தமது விண்ணப்பங்களை தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
4) விண்ணப்பதாரிகள் சங்கத்தின் தலைமை அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூரணப்படுத்தி இப் படிவத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ்களின் போட்டோ பிரதியினையும் இணைத்து விண்ணப்பிக்கும் பதவியின் பெயரையும் குறிப்பிட்டு தலைவர் காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், அல்வின்வீதி, காரைநகர். என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.
5) சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6) முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், தகுதி இல்லாத விண்ணப்பங்கள், முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படும்
7) விண்ணப்ப முடிவுத்திகதி 14-08-2025.
8) கணினி அறிவு மேலதிக திறமையாகக் கருதப்படும்.

**தலைவர்,**
**காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,**
**அல்வின் வீதி, காரைநகர்.**
**தொலைபேசி இல- 021 373 7754/ 021 265 1361**


(C-3540)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## ஏவப்பட்ட சில விநாடிகளில் வெடித்துச் சிதறிய ரொக்கெட்

### அவுஸ்திரேலியாவில் சம்பவம்



(கன்பெரா)

அவுஸ்திரேலியாவில் முதல் முறையாக விண்ணில் செலுத்தப்பட்ட ரொக்கெட், சில விநாடிகளிலேயே வெடித்துச் சிதறியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமாக கில்மர் நிறுவனம் செயற்படுகிறது. குயின்ஸ்லாந்து மாகாணம் யாடலா நகரை மையமாகக் கொண்டு செயற்படும் இந்த தனியார் நிறுவனம் அரசின் நிதியுதவிகளைப் பெற்று வருகிறது.

இந்நிலையில் நாட்டிலேயே முதல் முறையாக ரொக்கெட் ஒன்றை தயாரித்து விண்ணில் செலுத்த கில்மர் நிறுவனம் தீர்மானித்தது.

அதன்படி "எரிஸ்" என்ற ரொக்கெட்டை தயாரித்தது. குறித்த நேரத்தின்படி இது புதன்கிழமை விண்ணில் ஏவப்பட்டது.

கில்மர் நிறுவனத்துக்கு சொந்தமான ஏவுதளத்தில் இருந்து அந்த ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது. கரும்புகையை கக்கியபடி விண்ணில் சீறிப்பாய்ந்த அந்த ரொக்கெட் 14 நொடிகளில் வானில் பறந்து கொண்டிருந்த போதே வெடித்துச் சிதறியது.

இதுதொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு மீண்டு வருவோம் என அந்த நிறுவனம் விளக்கம் தெரிவித்துள்ளது. (நி)

## இஸ்ரேலுக்கு அடிபணி

## ஆயுதங்களை ஒப்படைப்பதில் ஹி

(பெய்ரூட்)

**லெபனானின் அனைத்து அரசியல் பேச்சுக்களும், இஸ்ரேலின் தாக்குதலை நிறுத்துவதை நோக்கியதாக இருக்க வேண்டுமே தவிர நாங்கள் ஆயுதங்களை இஸ்ரேலிடம் ஒப்படைப்பதாக இருக்கக்கூடாது என்று ஹிஸ்புல்லா அமைப்பின் துணை தலைவர் நயும் காசிம் தெரிவித்துள்ளார்.**

இஸ்ரேல் - ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு இடையிலான போரில் ஹமாஸுக்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பு செயற்பட்டு வருகிறது. லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய வான் வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டனர்.

கடந்த ஆண்டு நவம்பரில் இஸ்ரேல் - ஹிஸ்புல்லா அமைப்பினர் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது. ஆனால், ஹிஸ்புல்லா அமைப்பினர் ஆயுதங்களைக் கொடுத்துவிட்டு சரணடைய கோரி, லெபனான் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. ஆனால், இதற்கு ஹிஸ்புல்லா அமைப்பினரும் மறுத்து வருகின்றனர்.

இதனிடையே, போர் நிறுத்தம் தொடர்பாக தலையிட்டு வரும் அமெரிக்கா, ஹிஸ்புல்லா அமைப்பினர் ஆயுதங்களை கைவிடுவது தொடர்பாக அமைச்சரவை கூட்டத்தை கூட்டி முறையான அறிவிப்பை வெளியிடுமாறு லெபனானுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் படையால் கொல்லப்பட்ட ஹிஸ்புல்லா கமாண்டர் புவாட் க்ரியின் ஓராண்டு நினைவு தினத்தையொட்டி, அந்த அமைப்பின் துணைத் தலைவர் நஷிம் காசிம் உரை நிகழ்த்தியுள்ளார்.

அ... ஆயுத... பவர்க... தான்... கூறுகி... நா... மாட்டே... நாடுக... ளவி... என்று... திட்டத்... இஸ்...

## பாகிஸ்தானிடம் எண்ணெய் வாங்கும் நிலை இந்தியாவுக்கு வரலாம் - கிண்டலடித்த ட்ரம்ப்

(வோஷிங்டன்)

இந்தியாவில் இருந்து ஏற்றுமதி ஆகும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதித்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய், ஆயுதங்களை இந்தியா பெருமளவில் வாங்குவதால் ட்ரம்ப் 25 சதவீதம் வரி விதித்துள்ளார். ஆகஸ்ட் முதல் புதிய வரிவிதிப்பு அமுலுக்கு வருகிறது.

இந்நிலையில், பாகிஸ்தானுடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளவதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக பேசிய ட்ரம்ப், பாகிஸ்தான் நாட்டுடன் நாங்கள் ஒப்பந்தம் ஒன்றை முடிவு செய்துள்ளோம்.

இதன்படி, பாகிஸ்தானிலுள்ள பெரிய அளவிலான எண்ணெய் இருப்புகளில் இருந்து எண்ணெய் எடுக்கும் பணியை இணைந்து மேற்கொள்ள போகிறோம்.



இதற்காக எண்ணெய் நிறுவனம் தேர்வு செய்யும் நடைமுறையில் ஈடுபட்டு இருக்கிறோம்.


யாருக்கு தெரியும், ஒரு நாள் இந்தியாவுக்கு கூட பாகிஸ்தான் எண்ணெயை விற்பனை செய்யக் கூடும் என்று ட்ரம்ப் கிண்டலாக தெரிவித்தார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையேயான போரை நான் தான் தடுத்து நிறுத்தினேன் என்று தொடர்ந்து ட்ரம்ப் கூறி வரும் நிலையில், பாகிஸ்தானுடன் அமெரிக்கா கைகோர்த்துள்ளது இந்தியாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ியமாட்டோம்!
## ஹிஸ்புல்லா பிடிவாதம்




ளார்.

அப்போது அவர் பேசியதாவது, ஆயுதங்களை ஒப்படைக்கச் சொல்பவர்கள், அதனை இஸ்ரேலிடம் தான் ஒப்படைக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

நாங்கள் இஸ்ரேலுக்கு அடிபணிய மாட்டோம். உள்நாட்டிலோ, அரபு நாடுகளிலோ அல்லது உலக ளவிலோ ஆயுதங்களைக் கைவிடு என்று கூறுபவர்கள், இஸ்ரேலின் திட்டத்திற்கு சேவை செய்கிறார்கள். இஸ்ரேல் எங்களை தோற்கடிக்க முடியாது.

லெபனானை பணிய வைக்க முடியாது. லெபனானின் அனைத்து அரசியல் பேச்சுக்களும், இஸ்ரேலின் தாக்குதலை நிறுத்துவதை நோக்கியதாக இருக்க வேண்டுமே தவிர, நாங்கள் ஆயுதங்களை இஸ்ரேலிடம் ஒப்படைப்பதாக இருக்கக்கூடாது, என அவர் தெரிவித்தார். (நி)

## பாலஸ்தீன அரசை அங்கீகரிக்க கனடா தீர்மானம் பிரதமர் அறிவிப்பு



(ஒட்டாவா)

பிரான்ஸ், பிரிட்டனை தொடர்ந்து கனடாவும் எதிர்வரும் ஐக்கியநாடுகள் பொதுச்சபையின் கூட்டத்தில் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கப்போவதாக தெரிவித்துள்ளது.

எனினும் இந்த நடவடிக்கை ஜனநாயக சீர்திருத்தங்களிலேயே தங்கியுள்ளது என தெரிவித்துள்ள கனடா பிரதமர் மார்க் கார்னி ஹமாஸ்இல்லாமல் அடுத்த வருடம் பாலஸ்தீன அதிகார சபைக்கு தேர்தலை நடத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் கூட்டத்தில் கனடா உத்தியோகபூர்வமாக பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரையில் யூதக் குடியேற்றங்கள் விஸ்தரிப்பு, காசாவில் மோசமடைந்து வரும் நிலைமை ஒக்டோபர் ஏழாம் திகதி ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதல் ஆகியவற்றை கருத்தில் கொண்டே இந்த முடிவை எடுத்துள்ளதாக கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

காசாவில் காணப்படும் மனித துயரம் சகிக்க முடியாததாக காணப்படுகின்றது. மிக வேகமாக மோசமடைகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## பயிற்சியின் போது விழுந்த அமெரிக்க விமானம்



(கலிபோர்னியா)

அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான எப் - 35 சி ரக போர் விமானம், பயிற்சியின் போது கலிபோர்னியாவில் கீழே விழுந்து நொருங்கியது.

மத்திய கலிபோர்னியாவின் ப்ரெஷ்னோ நகரில் இருந்து தெற்கு மேற்கு பகுதியின் 64 கிலோ மீற்றர் தொலைவில் கடற்படைக்கு சொந்தமான லீமோர் கடற்படை விமானத்தளம் அமைந்துள்ளது.

இங்கு எப்-35சிரக போர் விமானம் திடீரென தரையில் விழுந்து நொறுங்கியது.

அதிஷ்டவசமாக விமானி வெளியே குதித்து உயிர் தப்பினார்.

எப்-35 சி ரக விமானங்கள், பயிற்சி மற்றும் போரின் போது பயன்படுத்தப்படுகிறது. கடற்படையின் வி.எப் 125 ரப் ரைடர்ஸ் எனப்படும் பயிற்சி படைப் பிரிவினர் எப்-35 ரக போர் விமானங்களை பயன்படுத்தி வருகின்றனர்.

வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது இந்த விமானம் விபத்தில் சிக்கியது. இது குறித்து தகவல் அறிந்தவுடன் தீயணைப்பு மற்றும் மீட்பு குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர். (நி)

## சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் வெடித்துச் சிதறிய எரிமலை



(மொஸ்கோ)

ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்ப பகுதியில் நேற்று முன்தினம் காலை அதிசக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 8.8 ஆக பதிவானது.

இதையடுத்து அப்பகுதியைச் சுனாமி அலைகள் தாக்கியது. மேலும் ஜப்பான் மற்றும் அமெரிக்காவின் அலாஸ்கா, ஹவாய் ஆகியவற்றை சுனாமி தாக்கியது.

பசுபிக் கடலில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் காரணமாகப் பல நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன.

இந்த நிலையில் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து ரஷ்யாவின் மிகப் பெரிய எரிமலை வெடித்துச் சிதறத் தொடங்கி உள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்ட சில மணி நேரத்துக்கு பிறகு கம்சட்கா தீபகற்பத்தில் உள்ள 15 ஆயிரம் அடி உயரம் கொண்ட க்ளூச்செவ்ஸ்காய் எரிமலை வெடித்துச் சிதறியது. அதில் இருந்து தீப்பிழம்புகள் வெளியேறி வருகின்றன.

இந்த எரிமலை வெடிப்பை ரஷ்ய அறிவியல் கழகத்தின் யுனைடெட் புவி இயற்பியல் சேவை உறுதி செய்துள்ளது.

இதற்கிடையே அமெரிக்காவுக்கு விடுக்கப்பட்ட பெரிய சுனாமி அச்சுறுத்தல் முற்றிலும் கடந்துவிட்டதாக அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புச் செயலாளர் கிறிஸ்டி நோயம் தெரிவித்தார்.

ஆனாலும் வடக்கு கலிபோர்னியா கடற்கரையின் சில பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை அமுலில் உள்ளது.

சிலி நாடு தனது பசுபிக் கடற்கரையின் பெரும் பகுதிக்கு விடுக்கப்பட்ட சுனாமி எச்சரிக்கையை நீட்டித்து உள்ளது. இந்த நிலையில் பசுபிக் கடல் பகுதியில் மேலும் நில நடுக்கங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகஸ்ட் மாத இராசி பலன்கள்

## சாதகமான பலன்கள் கிடைக்கும்!



**மேஷம்:**

கிரகநிலை - தைரிய வீரிய ஸ்தானத்தில் புதன், குரு, சுக்கிரன் - சுக ஸ்தானத்தில் சூரியன் - பஞ்சம ஸ்தானத்தில் கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - லாப ஸ்தானத்தில் சனி (வ), ராகு என கிரக நிலைகள் உள்ளன.

**கிரகமாற்றம்:** 03.08.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து புதன் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17.08.2025 அன்று சுக ஸ்தானத்தில் இருந்து சூரியன் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.08.2025 அன்று சுக்கிரன் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25.08.2025 அன்று சுக ஸ்தானத்தில் இருந்து புதன் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் ராசியை ராசிநாதன் செவ்வாய் பார்ப்பதால் அவர் மூலம் நல்ல பலன்களை பெறப்போகிறீர்கள். ராசிநாதன் சஞ்சாரத்தால் மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். மனக்கவலை குறையும். எல்லாவகையிலும் சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம்.

தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். நல்ல பெயர் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்தில் வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம்.

கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுவதன் மூலம் இடைவெளி குறையும். பெண்களுக்கு எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

கலைத்துறையினருக்கு வீண் அலைச்சல் இருக்கும். அரசியல் துறையினருக்கு எல்லாவகையிலும் நன்மை உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் மேன்மை அடையக் கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம்.




**அஸ்வினி:** இந்த மாதம் பூர்வீகச் சொத்தில் இருந்த இழுபறி மாறும். தொழிலில் இருந்த மந்த கதி போகும். கொடுக்கல் - வாங்கலில் இருந்த சிக்கல் நீங்கும்.

கண் முன்னே தலைவிரித்தாடும் செலவுகளை சமாளிக்க வருமானத்தை தேடி ஓட வேண்டியிருக்கும்.

**பரணி:** இந்த மாதம் குடும்பத்தாருடன் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம்.

குடும்பத்தாரின் வெறுப்புக்கு ஆளாக வேண்டியிருக்கும்.

செல்வாக்கும், அந்தஸ்தும் பாதிக்கப்படும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் போகும்.

மனதில் விரக்தி மேலோங்கும். தாயாரின் உடல் நலம் பாதிப்படையும். வண்டி வாகனங்கள் விரயச்செலவு வைக்கும்.

**கார்த்திகை 1ஆம் பாதம்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் கவனம் செல்லாது. சிலர் சொந்த பந்தங்களை விட்டுப் பிரிய நேரிடும்.

சிலருக்கு உறவும் பகையாகும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். ஆரோக்கியம் திருப்தியாக இருக்கும்.

**பரிகாரம்:** நவகிரகத்தில் செவ்வாயை அர்ச்சனை செய்து தீபம் ஏற்றி வணங்குவது வாழ்வில் முன்னேற்றத்தை தரும்.

சந்திராஷ்டம தினங்கள்: ஆகஸ்ட் 03, 04, 05, 30, 31.

அதிஷ்ட தினங்கள்: ஆகஸ்ட் 13, 14.

## எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும்!



**ரிஷபம்:** கிரகநிலை - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் புதன், குரு, சுக்கிரன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் சூரியன் - சுக ஸ்தானத்தில் கேது - பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் - தொழில் ஸ்தானத்தில் சனி (வ), ராகு என கிரக நிலைகள் உள்ளன.

**கிரகமாற்றம்:** 03.08.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து புதன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

17.08.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சூரியன் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.08.2025 அன்று சுக்கிரன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25.08.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து புதன் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் நல்ல யோகமான பலன்களைப் பெறப்போகிறீர்கள். பணவரத்து அதிகரிக்கும். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும்.

புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான விடயங்கள் சாதகமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுவது நல்லது.

குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே உறவு பலப்படும். பிள்ளைகள் மகிழ்ச்சியடைய தேவையானவற்றை செய்வீர்கள். பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். கலைத்துறையினருக்கு வீண் அலைச்சல் இருக்கும். அரசியல் துறையினருக்கு தேவையற்ற அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது.

மாணவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம். பாடங்களில் கவனம் செலுத்துவது குறையக்கூடும். நன்கு படிப்பது நல்லது. பெற்றோர் ஆதரவு பெருகும். வெளிநாடு சம்பந்தமான படிப்புகளுக்கு உரிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது.

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் விரோதங்களையும் பிரச்சினைகளையும் சந்திக்க வேண்டி வரலாம். உங்கள் மனோதிடத்தைக் குலைக்கும் அளவிற்கு இப்போது உங்கள் எதிரிகள் பலமாகத் தலைதூக்குவார்கள். அவர்களால் உங்களுக்கும் உங்கள் உறவினர்களுக்கும் உங்கள் தொழிலுக்கும் சில சோதனைகள் ஏற்படலாம்.




**ரோகிணி:** இந்த மாதம் உங்களுக்கு நற்பலன்கள் நிகழ வாய்ப்புண்டு. எதிர்ப்படும் கஷ்ட நஷ்டங்களிலிருந்து விடுபட்டு சாமர்த்தியமாய் நஷ்டங்களையும் இழப்புகளையும் தவிர்த்திடுவீர்கள்.

மகன், மகளால் பெருமையும் கீர்த்தியும் ஏற்படும். மனம் நிம்மதியடையும்.

**மிருக சிரீஷம் 1, 2 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் வருமானம் பெருகினும் செலவுகளும் கூடும். மன இறுக்கம் நீங்கி புதிய தெம்புடன் செயற்படுவீர்கள்.

நீண்ட நாள் நோயால் அவதியுற்று மருத்துவமனையில் இருந்தவர்கள் குணமடைந்து வீடு திரும்புவர். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த மனக்கசப்புகள் மாறும்.

குடும்பச் சடங்குகள், தெய்வ ஆராதனைகள், திருமண வைபவங்கள் நிகழும்.

பரிகாரம்: விநாயகருக்கு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்ய செல்வம் சேரும். மனதில் மகிழ்ச்சி உண்டாகும்.

சந்திராஷ்டம தினங்கள்: ஆகஸ்ட் 06, 07.

அதிர்ஷ்ட தினங்கள்: ஆகஸ்ட் 15, 16

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதியை அதிகரிக்காமல் வருமானத்தை உயர்த்த முடியாது!

## ஆளுநர் சுட்டிக்காட்டு



**(யாழ்ப்பாணம்)**

**ஏற்றுமதியை அதிகரிக்காமல் வருமானத்தை உயர்த்த முடியாது. ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டுமானால், வடக்கு மாகாணத்தின் மிகச்சிறந்த வளமாக உள்ள விவசாயம் மற்றும் கடற்றொழிலின் உற்பத்திப் பொருட்களை பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றும் தொழிற்சாலைகள் உருவாக்கப்படவேண்டும். தொழிற்சாலைகள் உருவாக்கப்படுவதன் ஊடாக எமது வேலைவாய்ப்பு பிரச்சினையையும் தீர்க்கக் கூடியதாக இருக்கும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.**

இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சங்கம், றொட்டரி - யாழ்ப்பாணத்துடன் இணைந்து வட மாகாணத்தில் ஏற்றுமதிக்குத் தயாரான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் அரியாலை "ஜே ஹெஸ்ட் ஹோட்டலில்" நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், வட மாகாணம், மனிதத் திறமை, விவசாய பன்முகத்தன்மை, பாரம்பரிய கைவினைத்திறன் மற்றும் வளர்ந்து வரும் தொழில் முனைவோர் தளத்தால் நிறைந்துள்ளது. இருப்பினும், சந்தை அணுகல், தரச் சான்றிதழ் மற்றும் சிறு உற்பத்தியாளர்களை வெற்றிகரமான ஏற்றுமதியாளர்களாக மாற்றக்கூடிய வெளிப்பாடு ஆகியவற்றில் நாங்கள் நீண்ட காலமாக சவால்களை எதிர்கொண்டுள்ளோம்.

இந்த முயற்சி ஒரு மாற்றத்தக்க வாய்ப்பைக் குறிக்கிறது. இந்த வியாபாரத்திலிருந்து வியாபாரம் (Business 2 Business (B2B) மூலம் ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், ஆதரவு நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்குநர்களை ஒன்றிணைப்பதன் மூலம், நேரடி வணிக இணைப்புகள், அறிவுப் பகிர்வு மற்றும் நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஏற்றுமதி - தயார்நிலை ஆதரவு.

இத்தகைய இலக்கு தலையீடுகள் தற்போதுள்ள இடைவெளிகளைக் குறைக்கும் மற்றும் வடக்கில் உற்பத்தியாளர்கள் சர்வதேச தரங்களை பூர்த்தி செய்ய, செயற்பாடுகளை அதிகரிக்க மற்றும் அவர்களின் சந்தைகளை பல்வகைப்படுத்த உதவும்.

இது பொருட்களை ஏற்றுமதி செய்வது மட்டுமல்ல - இது மீண்டும் கட்டியெழுப்பவும் செழிக்கவும் உறுதிபூண்டுள்ள ஒரு பிராந்தியத்திலிருந்து நம்பிக்கை, புதுமை மற்றும் மீள்தன்மையை ஏற்றுமதி செய்வது பற்றியதாகவும் அமைகின்றது.

விவசாய வணிகம் முதல் கடல்வளம் வரை, பாரம்பரிய கைவினைப்பொருட்கள் முதல் தொழில்நுட்ப சேவைகள் வரை, நமது உள்ளூர் தொழில்களின் வலிமையை பயன்படுத்திக்கொள்ளுமாறு வருகை தரும் அனைத்து ஏற்றுமதியாளர்களையும் முதலீட்டாளர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் வழிகாட்டுதல், நிபுணத்துவம் மற்றும் தொடர்பாடல்கள் மூலம், வடக்கில் ஒரு துடிப்பான ஏற்றுமதி சமூகத்தை உருவாக்க முடியும் எனத் தெரிவித்தார். (8)

# இலங்கைக்கு கடத்த முயன்ற 240 கிலோ கஞ்சா பறிமுதல்



(மன்னார்)

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்த சரக்கு வாகனத்தில் தக்காளி பெட்டிகளுக்கு பின்புறம் 7 மூட்டைகளில் பதுக்கி வைத்து கொண்டுவரப்பட்ட 240 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதோடு, ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பகுதியைச் சேர்ந்த வாகன சாரதி ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு திருச்சியில் இருந்து ஆந்திரா மாநிலத்திற்கு முருங்கைக்காய் உள்ளிட்ட காய்கறி பொருட்களை ஏற்றிச் சென்று சரக்குகளை ஆந்திராவில் இறக்கிய பின்பு அவரது சொந்த ஊரான தென்காசி மாவட்டம், ஆலங்குளம் பகுதிக்கு வந்துள்ளார்.

பின்னர் இரு தினங்கள் அங்கு தங்கிவிட்டு, தூத்துக்குடி மாவட்டம் வேம்பார் கடற்கரை நோக்கி நேற்று முன்தினம் புதன்கிழமை வந்துள்ளார்.

அப்போது வேம்பார் கடற்கரை அருகே சந்தேகத்திற்கிடமாக வாகனம் நின்று இருப்பதை பார்த்த பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். அப்போது முன்னுக்குப் பின் முரணான தகவலை கூறியுள்ளார்.

தொடர்ந்து, மாவட்ட போதை பொருட்கள் கடத்தல் தடுப்பு நுண்ணறிவு பிரிவு பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். பின்னர் வாகனத்தை சோதனையிட்ட போது வாகனத்தில் தக்காளி கூடைகளுக்கு பின்புறம் மூட்டை மூட்டையாக கஞ்சா இருப்பது தெரியவந்தது.

மேலும், 50 இலட்ச ரூபாய் மதிப்பிலான 240 கிலோ கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதன் சர்வதேச மதிப்பு 1 கோடி ரூபாய் இருக்கும் என கூறப்படுகிறது. இது தொடர்பாக வாகனத்தை ஓட்டி வந்த சாரதியிடம் விசாரணை மேற்கொண்ட போது படகு மூலம் கஞ்சாவை இலங்கைக்கு கடத்த முயன்றது தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (8-285)

# வைக்கோல் கட்டும் இயந்திரம் அறிமுக விழா

(குருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட முரசு மோட்டை 2 ஆம் கட்டை பகுதியில் வைக்கோல் கட்டும் இயந்திர அறிமுக விழா நேற்று நடைபெற்றது.

இந் நிகழ்வில் கமக்கார அமைப்பினர் மற்றும் தொழிலதிபர்கள், வங்கி ஊழியர்கள், கிழக்கு மாகாண விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமை தாங்கி ஊற்றுப்புல விநாயகர் ஆலயத்தில் ஆரம்ப நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

Overseas (Automotive PVT LTD) Shaktiman (Making Agri culture more economical) நிறுவனத்தினரால் விவசாயிகளிற்கான எளிய முறையில் விவசாயிகளுக்கு வைக்கோல் கட்டும் இயந்திரம் அறிமுகபடுத்தியதோடு குறித்த இயந்திரம் மூலம் எவ்வாறு இலகுவாக வேலை செய்வது என்பதனையும் செயன்முறை மூலம் அறிமுகப்படுத்தியிருந்தனர்.

குறித்த நிகழ்வின் அடுத்த கட்டமாக கிளிநொச்சியில் நவீன இயந்திரம் தொடர்பான கலந்துரையாடலும் இடம் பெற்றிருந்தது. இதில் கமக்கார அமைப்பினர் மற்றும் விவசாயிகள் தொழிலதிபர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-316)


கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி சங்கீத பாட ஆசிரியை
திருமதி. பானுரேகா சஞ்சீவன்
அவர்களின் அன்புத் தாயார்
அமரர். விஸ்வநாதன் ஸ்ரீ தவராணி



அவர்கள் 31.07.2025 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(சி-3538)
யாழ்.இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 835





அத்தை ஓடைக்கரையை அடிக்கடி பார்ப்பதின் காரணம் சீக்கிரம் தெளிவாகி விட்டது. பூங்குழலியின் கவலையை அது போக்குவதாயிருந்தது.

ஒரிடத்தில் ஐந்தாறு மான்கள் ஓடைக்கரைப் புதர்களின் இடையில் தெரிந்தும் தெரியாமலும் நின்று படகை எட்டிப் பார்த்தன! இல்லை படகைப் பார்க்கவில்லை! ஊமை ராணியைப் பார்த்தன! ஆகா! மான்களைப் போன்ற அழகான பிராணிகள் உலகில் வேறு எதுவும் இல்லை! மான்களைப் படைத்த கடவுள் எதற்காக மனிதர்களையும் படைத்தாரோ, தெரியவில்லை! சண்டாள மனிதர்கள்! இவ்வளவு அழகான பிராணிகளை வேட்டையாடிக் கொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள் அல்லவா?

மான்களைப் பார்த்து, அவற்றின் அழகை நினைத்து, அதிசயித்த பூங்குழலியின் கரங்கள் துடுப்புப் போடுவதை நிறுத்தியது படகு நின்றது.

ஊமை ராணியின் தொண்டையிலிருந்து ஒரு விசித்திரமான ஒலி கிளம்பிற்று. அது அன்று காலையில் கேட்ட குரல் போல் இல்லை. இதில் திகிலும் எச்சரிக்கையும் கலந்திருந்தன. அதைக் கேட்ட மான்களும் திகில் அடைந்து திரும்பி ஓடத்தொடங்கின.

அதே கணத்தில் எங்கேயோ மறைவான இடத்திலிருந்து ஓர் அம்பு விர் என்று ஒரு மானின் மீது தைத்தது. அம்பு தைத்த மான் சோகம் நிறைந்த ஓலமிட்டது.

ஊமை ராணி படகிலிருந்து கரையில் தாவிக்குதித்துக் காயமடைந்த மானை நோக்கி ஓடினாள்.

அவள் மானின் சமீபத்தை அடைந்த அதே சமயத்தில் நாலாபுறத்துப் புதர்களிலும் சலசலப்புச் சத்தம் உண்டாயிற்று. அடுத்த வினாடிகளில் ஏழெட்டுப் பேர் வந்து அவளைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களில் பலர் கையில் வேலாயுதங்கள் இருந்தன. சற்றுத் தூரத்தில் அவர்களுக்கு வழிகாட்டி அழைத்து வந்த ராக்கம்மாளும் காணப்பட்டாள்.

ஊமை ராணி தப்பி ஓட முயன்றாள் முடியவில்லை. தப்பி ஓடுவது இயலாத காரியம் என்று அறிந்ததும் ஊமை ராணி சும்மா நின்று விட்டாள். இரண்டு பேர் நெருங்கி வந்து அவளுடைய கைகளைக் கயிற்றினால் பிணித்துக் கட்டினார்கள்.

இவ்வளவும் பூங்குழலி பார்த்துக் கொண்டிருக்கும் போதே சில வினாடி நேரத்தில் நிகழ்ந்து விட்டன.

ஊமை ராணியின் கரங்களைக் கயிற்றினால் கட்டுகிறார்கள் என்பதை அறிந்ததும் பூங்குழலி படகிலிருந்து பாய்ந்து கூச்சலிட்டுக் கொண்டு ஓடி வந்தாள். கையிலிருந்த துடுப்பை ஓங்கிக் கொண்டு வந்தாள்.


ஊமை ராணியைச் சுற்றி நின்றவர்களில் ஐந்தாறு பேர் பூங்குழலியை நோக்கி ஓடிவந்தார்கள். அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய்ப் படகில் தூக்கிப் போட்டுக் கயிற்றினால் இறுக்கிக் கட்டிவிட்டார்கள். பிறகு திரும்பிச் சென்றார்கள் அவர்களுடன் சாவதானமாக வந்த ஊமை ராணியையும் அழைத்துக் கொண்டு சில விநாடி நேரத்தில் மறைந்து விட்டார்கள்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## வட்டிக்கு சேர்த்த பணம்



கண்ணனூர் என்னும் ஒரு ஊரில் குஞ்சம்மாள் என்னும் பாட்டி வாழ்ந்து வந்தார்கள், பாட்டிக்கு எப்பொழுதும் பயம் தான், தன்னுடைய எதிர்கால வாழ்க்கைக்கு நிறைய சேமித்து வைக்க வேண்டும் என்று அந்த ஊரில் உள்ள ஏழைகளுக்கு அநியாய வட்டிக்கு விட்டு சம்பாதித்தாள். சரியான முரட்டுப் பேர் வழியாக இருந்தாள். ஒரு நாள் வட்டி கொடுக்க தாமதமானாலும் உடனே அபராத வட்டி போட்டு வாங்கி விடுவாள். இதனால் அங்குள்ள ஏழைகள் மிகுந்த துன்பப்பட்டனர். அங்குள்ள ஏழை மக்கள் மிகவும் வருத்தப் படுவார்கள். இந்த பாட்டிக்கு ஏன் இந்த பேராசை, ஏழை மக்களிடம் வட்டி வாங்கி யாருக்கு சேமிக்கிறாள் என்று வருத்தப்படுவார்கள். ஒரு நாள் அந்த ஊருக்கு எத்தன் ஒருவன் வந்தான், அவன் பாட்டியைப் பற்றிக் கேள்விப் பட்டவன், பாட்டியை ஏமாற்ற வேண்டும் என்று முடிவு செய்தான்.

அதற்காக அவனுடைய கூட்டாளிகள் இருவரை மாறு வேடத் தில் ஜமீந்தார் போல செல்ல சொன்னான்.

இந்த வீட்டுல யார் இருக்காங்க? வாசலில் யாரோ இருவர் வந்து கேட்கவும், வீட்டிற்குள் இருந்த பாட்டி வெளியே வந்தாள். நல்ல உடையணிந்த இருவர் வெளியில் நிற்பதை பார்த்தவள் நீங்கள் யார்? எதற்கு வந்திருக்கிறீர்கள் என்று கேட்டாள்.

நான் பக்கத்து ஊர் பொன்னையாபுரம் ஜமீந்தார். இந்த ஊரில் கொஞ்சம் நிலம் வாங்கி போட ஆசைப் படுகிறேன், அதற்கு உங்களை மாதிரி பெரிய மனிதர்கள் இரண்டு பேரிடம் இங்கெல்லாம் என்ன விலை விற்கிறது என்று கேட்பதற்காக வந்திருக்கிறேன்.

பாட்டிக்கு ஒரே மகிழ்ச்சி, இரண்டு பெரிய மனிதர்கள் தன்னிடம் வந்து விவரம் கேட்கிறார்கள் என்றவுடன் வாங்க உள்ளே, என்று மரியாதையுடன் வீட்டிற்குள் அழைத்து சென்றாள், உள்ளே சென்ற இருவர்களுக்கும் குடிப்பதற்கு நீர் மோர் கொடுத்து மற்ற விவரங்களை பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அம்மா அம்மா, என்று வெளியே ஒரு குரல் கேட்டது, வெளியே வந்த பாட்டி, அங்கு எத்தன் கையில் சிறு மூட்டையுடன் நின்று கொண்டிருந்தான். யாரப்பா நீ ? உனக்கு என்ன வேண்டும்? பாட்டி கேட்க அம்மா நான் வெளியூர்க்காரன் என்பெண் திருமணத் திற்கு கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது, அதனால் என் மனைவியின் நகைகளை வைத்து உங்களிடம் பணம் பெற்று செல்லலாம் என்று வந்தேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான மக்களாட்சி மலர வேண்டுமானால் மனிதன் சிந்திக்க வேண்டும். – சாக்ரடீஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வீதிகளில் ஏற்படும் சிறு சேதங்களை உடனடியாகத் திருத்தம் செய்யுங்கள்

கட்டிடம் கட்டுவதிலும் வீதிகள் அமைப்பதிலும் பார்க்க மிகவும் முக்கியமானது அவற்றைப் பராமரிப்பதாகும்.

ஆம், எவ்வளவுதான் பணத்தைக் கொட்டிக் கட்டிடத்தைக் கட்டினாலும் அவை உரியவாறு பராமரிக்கப்படாவிட்டால், அந்தக் கட்டிடங்கள் வேகமாகப் பழுதடைந்து பாவனைக்குப் பயன்படாத சொத்தாகிவிடும்.

இதற்கு நல்ல உதாரணம் காங்கேசன்துறையில் கட்டப்பட்ட ஜனாதிபதி மாளிகையாகும்.

ஆம், முழுக் காலமும் தானும் தன் குடும்பமும் ஆட்சி செய்யும் என்ற நினைப்பில், மகிந்த ராஜபக்ஷ தரப்பால் காங்கேசன்துறையில் பெருந்தொகை பணச் செலவில் ஜனாதிபதி மாளிகை கட்டப்பட்டது.

அதிலும் சித்தர் பெருமக்களின் ஜீவசமாதிகள் இருந்த இடத்தில் ஜனாதிபதி மாளிகையை அமைத்துவிட, இப்போது ஜனாதிபதி மாளிகையை அமைத்தவரும் அவர் குடும்பமும் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாத அவலத்துக்கு ஆளாகியுள்ளனர்.

இதேவேளை காங்கேசன்துறையில் அமையப் பெற்ற ஜனாதிபதி மாளிகை உரியவாறு பராமரிக்கப்படாமை காரணமாக, கடற்காற்றில் கட்டிடத்தின் ஜன்னல்கள், கதவுகள் என எல்லாமும் துருப்பிடித்து பழுதடைந்து போகின்றன.

ஆக, கட்டிடத்தை அமைப்பதற்கு முன்னதாக அதன் பராமரிப்புப் பற்றிச் சிந்திப்பது மிகவும் அவசியமாகும்.

அதேபோல வீதிகளை அமைப்பது மட்டும் முக்கியமான விடயமல்ல. மாறாக நிர்மாணிக்கப்பட்ட வீதிகளைப் பராமரிப்பதும் மிகவும் கட்டாயமானது.

ஆம், அமைக்கப்பட்ட வீதியில் ஒரு சிறு சேதம் ஏற்பட்டால்கூட, அந்தச் சேதம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும்.

அவ்வாறு திருத்தம் செய்வதன் மூலம் பெரும் சேதம் ஏற்படுவது தவிர்க்கப்படும்.

எனினும் இதுவிடயத்தில் வீதி நிர்மாணிப்புகளுடன் சம்பந்தப்பட்ட அமைப்புகள் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

உண்மை. எமது பிரதேசத்தில் அமைக்கப்பட்ட காபற் வீதிகளின் ஓரங்களில் அணைக்கப்பட்ட மண் கரைந்தும் வீதியின் விளிம்புகள் உடைந்தும் போவதைக் காண முடிகிறது.

இதேபோல உள்ளூராட்சி சபைகளின் ஆளுகைக்குட்பட்ட வீதிகள் மற்றும் ஒழுங்கைகளும் சிறு சிறு சேதத்துக்கு ஆளாகின்றன.

இந்தச் சேதங்கள் உடனடியாகச் செப்பனிடப்பட வேண்டும். இதைச் செய்யாதபோது, அந்த சிறு சேதம் குறித்த வீதி முழுவதையும் பாழாக்கிவிடும்.

எனவே வீதிகளில் ஏற்படும் சிறு சேதங்களைச் செப்பனிடும் பணியில் ஒரு விசேட குழுவை ஈடுபடுத்த வேண்டும்.

இதைச் செய்வதன் மூலம் மீளவும் வீதி புனரமைக்கின்ற தேவை இல்லாமல் போகும்.

# இனியபாரதி தலைமையில் நடந்ததாக கூறப்படும் முக்கிய கொலைச் சம்பவங்கள்

## சடலங்கள் தோண்டும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

கடத்தப்பட்டு காணாமல் போன 18 வயதான பார்தீபன், முன்னாள் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் சு.ரவீந்திரநாத், ஊடகவியலாளர் பிரதீப் எக்நெலிகொட ஆகியோர் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் இடம் தோண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் இந்து மயானத்தில் தோண்டும் நடவடிக்கை நேற்று வியாழக்கிழமை (31) குற்றப் புலனாய்வு பிரிவினரால் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டது.

இனியபாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினராக கே.புஷ்பகுமார் மற்றும் அவரது சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோர் கடந்த ஆறாம் திகதி குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 2007ஆம் ஆண்டு ஜூன் 28ஆம் திகதி திருக்கோவில் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த இருவரையும் தவிர்ந்து இனிய பாரதியின் சகாக்களான செந்தூரன், திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த விக்கினேஸ்வரன், வெலிகந்தை தீவுச்சேனையைச் சேர்ந்த பாலிகிருஷ்ணன் சபாபதி மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த ரமேஸ் கண்ணா ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்த தோண்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி கடந்த 2009ம் ஆண்டு திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த 18 வயதுடைய மாணவன் பார்தீபன், 2006ஆம் ஆண்டு டிசம்பர் 15 ம் திகதி கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த கிழக்குப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எஸ்.ரவீந்திரநாத், 2010- ஜனவரி 26ஆம் திகதி ஊடகவியலாளர் பிரதீப் எக்நெலிகொட ஆகியோர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை குறித்த மயானத்துக்கு கடந்த இரு தினங்களாக அழைத்துச் சென்று புதைக்கப்பட்ட இடங்களை அடையாளப்படுத்தினர்.

இதற்கமைய குறித்த மயான இடத்தைத் தோண்டி சோதனை செய்வதற்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அனுமதி கோரியிருந்தனர்.

இதற்கமைய நேற்று பிற்பகல் நீதவான் ஏ.எல்.எம்.றிஸ்வான் முன்னிலையில் தோண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இந்திய மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும்

# இராமேஸ்வரம் - மன்னார் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்

(சென்னை)

இந்திய மத்திய அரசின் அனுமதி கிடைத்த தன் பின்னர் இராமேஸ்வரத்துக்கும் இலங்கையின் தலை மன்னாருக்கும் இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும் எனத் தமிழ் நாட்டின் பொதுப்பணித்துறை அமைச்சர் ஏ.வ.வேலு தெரிவித்தார்.

இராமேஸ்வரத்தில் புதிய துறைமுக அலுவலகம் ஒன்றை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

118 கோடி இந்திய ரூபாய் செலவில் இராமேஸ்வரம் முதல் இலங்கையின் தலைமன்னார் வரையிலான பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் குறித்த சேவை ஆரம்பிக்கப்படும் என்றார். (ம-7)

# துப்பாக்கிச்சூடு இளைஞன் பலி

களுத்துறை - கொஸ்கொட, தூவமோதர பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 23 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு.வுட்லர் தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் குறித்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# போதைவஸ்துடன் ஒருவர் கைது

(பொரளை)

கொழும்பு, பொரளை பகுதியில் ஒரு கிலோ கிராமுக்கு அதிகம் எடையுள்ள ஐஸ் போதைப் பொருளுடன் நபரொருவர் பொரளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி 10 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.(ம-7)

# ஆகஸ்ட் மாத எரிபொருள் விலைகளில் மாற்றம் இல்லை

(கொழும்பு)

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின்படி, ஆகஸ்ட் மாதத்திற்கான எரிபொருள் விலையில் எந்த மாற்றமும் இருக்காது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதன்படி கடந்த ஜூலை மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட அதே எரிபொருள் விலை திருத்தம் ஆகஸ்ட் மாதத்திற்கும் அமுலுக்கு வரும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 92 ரக பெற்றோல் 305 ரூபாயும் டீசல் 289 ரூபாயும் மண்ணெண்ணெய் 185 ரூபாக்கும் விற்கப்படும். (ம-7)

## கோப்பாயில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

கோப்பாயில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கோப்பாய் கட்டப்பிராயைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான சுந்தரம் குகனேஸ்வரன் (வயது -66) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபருக்கு கொடுக்கல் வாங்கல் பிரச்சினை இருந்துள்ளது. இந்நிலையில் மன விரக்தியால் தவறான முடிவெடுத்து நேற்று முன்தினம் தூக்கில் தொங்கி உயிர் மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.(ம-7,60,104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மொசாட் 26

சொக்கன்

இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு ரீவென் ஷிலோஹ் புதிய உளவாளிகளைவேலைக்குச் சேர்க்கலாம். மற்ற உளவு நிறுவனங்களில் இருக்கிற திறமைசாலிகளை மொசாட்டுக்கு இழுக்கலாம். நவீன கருவிகள் வாங்கலாம் உலகளாவிய ஒற்றர் நெட்வொர்க் அமைக்கலாம். எப்படியாவது நம்முடைய உளவுத் துறை பலப்படவேண்டும்.

நமது எதிரிகளைப் பற்றிய தகவல்கள் அனைத்தும் முன் கூட்டியே கிடைக்க வேண்டும். அதுதான் முக்கியம்.

சுருக்கமாகச் சொன்னால் வானளாவிய அதிகாரம், நினைத்ததைச் செய்யும் சுதந்திரம், கை நிறையப் பணம் மற்ற உளவுப் பிரிவுகளின் தலைவர்கள் மொசாட்டைப் பொறாமையுடன் பார்க்க ஆரம்பித்தார்கள்.

### மொசாட் முன்னேற்றக் கழகம்

அதிகாரம் எங்கே குவிந்தாலும் பக்கத்திலேயே கவிழ்ப்பு வேலைகள் ஆரம்பமாகிவிடும். அது உளவுத்துறையாக இருந்தாலும் சரி உள்ளாட்சித்துறையானாலும் சரி இஸ்ரேலில் மொசாட் என்கிற நிறுவனத்துக்குப் பெயர் வைத்து போர்ட் மாட்டித் திகதியிலேயே அதன் காலை வாருகிற பேஜார் வேலைகள் தொடங்கிவிட்டன. மற்ற அரசாங்கத்துறை கள் உளவுப் பிரிவுக ளில் இருந்த அதிகாரிகளெல்லாம் எப்போது மொசாட்டைக் கவிழ்க்கலாம் அந்த அதிகாரத்தைத் தங்கள் கைக்குள் கொண்டுவரலாம் என்று துடித்துக் கொண்டிருந்தார்கள்.

இவர்களுக்கு வசதியாக ஆரம்ப கால மொசாட் ஏஜென்ட்கள் சிலர் கத்துக்குட்டித்தனமான உளவு வேலைகளில் இறங்கி மாட்டிக்கொண்டார்கள். இதைப்பற்றிக் கேள்விப்பட்ட அந்த நாட்டு அரசாங்கங்கள் உடனடியாக இஸ்ரேலுக்கு ஐ.எஸ்.டி.கால் போட்டுக் கண்டித்தார்கள்.



இந்த உளவு பார்க்கிற வேலையெல்லாம் வேண்டாம். ஒழுங்காக வாலைச் சுருட்டிவெச்சுட்டு சமர்த்தா இருங்க இல்லாட்டி ஒட்ட நறுக்கிடுவோம்!

இரகசியமாக இயங்க வேண்டிய ஓர் அமைப்பு இப்படி ஊருக்கு ஊர் உதை வாங்கி மானம் போனால் என்ன ஆவது? இந்தச் சொதப்பலுக் கெல்லாம் யார் காரணம்?

வேறு யார்? மொசாட் தலைவர் ரீவென் ஷிலோஹ் தான். அவர் மட்டும் கொஞ்சம் ஒழுங்காக கட்டுக்கோப்பாக மொஸாட்டை உருவாக்கி தொலைநோக்குப் பார்வையுடன் வழி நடத்தியிருந்தால் இப்படி நம்முடைய ஏஜென்ட்கள் வெளி நாட்டில் போய் மாட்டிக் கொள்வார்களா?

கொஞ்சம் கொஞ்சமாக இஸ்ரேல் அரசாங்க வட்டாரங்களில் ரீவென் ஷிலோஹ்க்கு எதிரான கோஷங்கள் அதிகரித்தது. அவருக்கு வயசாயிடுச்சு பேசாம சீட்டைக் கிழிச்சு வீட்டுக்கு அனுப்பிட்டு வேற உருப்படியான தலைவரைக் கண்டுபிடிங்க. இல்லாட்டி மொசாட்டுக்கு எதிர்காலமே கிடையாது.

பிரதமர் யோசித்தார். ரீவென் ஷிலோஹ் நல்ல திறமைசாலி தான். ஆனால் அவருடைய தலைமையின்கீழ் மொசாட்டில் எந்தப் பெரிய முன்னேற்றத்தையும் காணோம். இஸ்ரேலின் ஒட்டு மொத்தப் பாதுகாப்பையும் இவரை நம்பிப் பணயம் வைக்க முடியுமா? ரொம்ப ரிஸ்க்!

நிலைமையைப் புரிந்துகொண்ட ரீவென் ஷிலோஹ் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்தார். அவருக்குப் பதிலாக மொஸாட்டின் புதிய தலைவராக ஐஸா ஹரேல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மொசாட்டின் ஐஸர் ஹரேல் செய்த முதல் வேலை எல்லா ஏஜென்ட்கள் அதிகாரிகளையும் கூப்பிட்டு ட்ரில் வாங்கியதுதான்.

இங்கே இருக்கிற ஒவ்வொருத்தரும் பெரிய கில்லாடிங்கதான். சந்தேகமே இல்லை ஆனா நம்மோட ஒட்டு மொத்த நடவடிக்கைகளைப் பார்க்கும்போது மொசாட் இதுவரைக்கும் பெரிசா எதையும் சாதித்து விடவில்லை. அப்புறம் இத்தனை திறமைசாலிங்க ஒண்ணாச் சேர்ந்து என்ன பிரயோஜனம்? நாம உடனடியாக இதைப் பத்தி யோசிக்கணும்.பிரச்சினையைச் சரி செய்யணும். இனி மேலும் சும்மா உட்கார்ந்திருந்தா நம்ம எல்லோருக்குமே ஆபத்து!

ஐஸர் ஹரேல் சும்மா மிரட்டுவதோடு நிறுத்திக்கொள்வில்லை நிஜமாகவே ஒவ்வோர் ஏஜென்டுக்கும் என்ன பிரச்சினை என்று யோசித்து அவர்களுடைய திறமையில் தென்படுகிற இடைவெளிகளைக் கண்டுபிடித்துச் சரி செய்வதற்கான முயற்சிகளை எடுத்தார். அதற்குத் தேவையான பயிற்சிகள், வழிகாட்டல் கூடுதல் வசதிகள், உதவிகளுக்கு ஏற்பாடு செய்தார். இத்தனைக்குப்பிறகும் ஒழுங்காகச் செயற்படாத நோஞ்சான்களைவீட்டுக்குஅனுப்பவும் தயங்கவில்லை.

அவருடைய நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அன்றைய மொசட் உளவாளிகளுக்கு ஒரு விடயம் தெளிவாகப் புரிநந்தது. இனிமே இங்கே பெஞ்ச் தேய்ச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கிறது சரிப்படாது. அரைகுறை வேலையே கூடாது. எதையும்முழுசா சிறப்பாச் செய்யணும் இல்லாட்டி மூட்டையைக் கட்டிகிட்டுக் கிளம்பவேண்டியது தான்.

பழைய ஏஜென்ட்களுக்குச் சுறுசுறுப்பு ஊசி போட்டபிறகு புதிய மொசாட் உளவாளிகளைக் கண்டுபிடிக்கும் வேலை தொடங்கியது. இந்த விடயத்தில் ஐஸர் ஹரேல் யாரையும் நம்பவில்லை. அவரே பல நாடுகளுக்குப் பயணம் செய்து தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு வரையும் இன்டர்வ்யூ செய்தார். கொஞ்சம் சுமாரான சந்தேகத்துக்கு இடமான நபர்களைத் தயவு தாட் சண்யம் பார்க்காமல் நிராகரித்துவிட்டார்.

இனிமேல் மொஸாடில் ஒன்றரையணா ஆள்களுக்கு இடம் இல்லை. இங்கே இருக்கிற எல்லோரும் மகா கில்லாடிகளாக இருக்க வேண்டும். அதற்கு அரை இஞ்ச் குறைந்தாலும்கூட வெளியே தள்ளிக் கதவைச் சாத்து!

அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்குள் ஐஸர் ஹரேலின் கடின உழைப்புக்கு பலன் தெரிய ஆரம்பித்தது. அநேகமாக எல்லா முக்கிய நாடுகளிலும் மொஸாட்டுக்குத் திறமையான உளவாளிகள் இருந்தார்கள். அவர்கள் திரட்டி அனுப்பிய தகவல்கள் இஸ்ரேலுக்கு உடனுக்குடன் வந்து சேர்ந்தன. ஆனால் பின்னணியில் இப்படி ஒரு இரகசிய நெட்வொர்க் இயங்கிக் கொண்டிருப்பது யாருக்கும் தெரியவில்லை. தகவல் திரட்டுவதுடன் நிறுத்திக் கொள்ளாமல் இஸ்ரேலின் நலனுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய வெளிமுயற்சிகளை முக்கியமாகப் பாலஸ்தீனர்களின் தாக்குதல் திட்டங்களை முன்கூட்டியே கண்டறிந்து தடுத்து நிறுத்தியது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதிதாக 3...

குழி அகழ்வின் 2ஆம் கட்டத்தின் 26ஆவது நாள் அகழ்வு நேற்று யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 03 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் 03 முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 118 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 105 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## உயிரியல்...

வழங்கப்படுகிறது.

சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும்யாழ்.மாநகரசபை ஆணையாளருமான ச.கிருஷ்ணேந்திரன் தலைமையில் கூடிய சைவசமய விவகாரக் குழுவின் மகாசபை, 2025ஆம் ஆண்டிற்கான யாழ்விருதை உயிரியல் ஆசானும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுநிலை விரிவுரையாளருமான சின்னத்தம்பி குணசீலன் அவர்களுக்கு வழங்குவதென ஏகமனதாகத் தீர்மானித்தது.

மருத்துவத் துறையிலும் விஞ்ஞானத் துறையிலும் தமிழ் மாணவர்கள் சாதனை படைப்பதற்கும் உயரிய பதவிகளில் இருப்பதற்கும் பேருதவி ஆற்றிய ஆசான் குணசீலன் அவர்கள், போர்க்கால சூழலிலும் நம் மாணவர்களின் கல்விக்காக அரும்பாடு பட்டவர்.

சான்றாண்மைமிக்க மருத்துவர்களை - விஞ்ஞானத்துறை சார்ந்தவர்களை உருவாக்கியதுடன் மாணவர்களின் பெரும் மதிப்பையும் பெற்றவர்.

மாணவர்களின் நிலை அறிந்து தனது கல்விப் பணியை ஆற்றிய மைக்காக யாழ்.மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழு 2025ஆம் ஆண்டிற்கான உயரிய யாழ்விருதை அவருக்கு வழங்கிக் கௌரவிக்கிறது.

விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 06ஆம் திகதி காலை 09.00 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவில் இடம்பெறும். (ந)

## செம்மணிப் புதை...

ஆறு.திருமுருகன் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

செம்மணிப் புதைகுழி தொடர்பில் நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதியான தீர்வு வேண்டும். குழந்தைகள் முதல் எத்தனை அப்பாவிகளைக் கொடூரமாகக் கொலை செய்து மண்ணுக்குள் புதைத்த கொடிய செயலை யாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இலங்கையில் இரக்கமின்றி தமிழ் மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள் என்பதற்கு செம்மணிப் புதைகுழி முக்கிய ஆதாரமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போர் முடிந்தாலும் உறவுகளின் இழப்புகளினால் மிகுந்த கவலையோடு வாழும் உறவினர்களுக்கு செம்மணி விவகாரம் மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. செம்மணிப் புதைகுழி ஆராய்ச்சி தொடர்பாக ஈடுபடுகின்ற அனைவருக்கும் இவ்வேளையில் நன்றி கூறுவதோடு நீதியான விசாரணை தொடர்ந்து இடம்பெற வேண்டும். இலங்கையில் உள்ள மனிதாபிமான அமைப்புகள் யாவும் இவ்விடயத்தில் அக்கறை கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை இவ் விடயத்தில் நேரடியாகப் பங்குகொள்ள வேண்டும். இலங்கை அரசாங்கம் செம்மணி விவகாரம் தொடர்பாக நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். புதைகுழிகளில் விளையாட்டுப் பொம்மையும் பால் பருக்கும் போத்தலும் பச்சிளம் பாலகர்களின் எலும்புக் கூடுகளோடு உலகுக்குச் சொல்லும் செய்தியைச் சகலரும் உணர வேண்டும். காலம் கடந்தாலும் இயற்கை, இறைவன், புதைகுழிகள் ஊடாக உண்மையை வெளிப்படுத்தியுள்ளமை **தர்மம் தோற்காது** என்ற நம்பிக்கையைத் தருகிறது. கட்சி பேதமின்றி தமிழர்கள் ஒன்றுபட்டு இவ்விவகாரத்துக்கு நீதி கிடைக்க முயற்சி செய்ய வேண்டும் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஆயிரம்...

ஆயிரம் பெண் உத்தியோகத்தர்களை நியமிக்க முடிவு செய்துள்ளதாகப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

மேலும் ஐயாயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்காணல்கள் ஏற்கெனவே தொடங்கி விட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

பொலிஸ்துறையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இது செயற்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார். (ம-7)

## கிளி...

கிளிநொச்சி - தருமபுரம்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவு ஏ35 பிரதான வீதியின் அருகே தனியார் காணி ஒன்றில் விடுதலைப் புலிகளின் ஆயுதம் இருப்பதாகக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக பொலிஸாரால் நேற்று வியாழக்கிழமை (31) கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் இஸ்மாத் ஜெமீல் முன்னிலையில் அகழ்வுப்பணி முன்னெடுக்கப்பட்டது.

பொலிஸார், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் அகழ்வுப்பணி மேற்கொள்ளப்பட்ட போது எந்தவிதத் தடயங்களும் கிடைக்காத நிலையில் குறித்த அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. (ம-7,316)

## பரந்தனில்...

இதில் பரந்தன் இந்துக் கல்லூரியின் பழைய மாணவியும் பட்டதாரியுமான கிளிநொச்சி உமையாள்புரத்தைச் சேர்ந்த சந்திரசேகரம் யதுகிரி (வயது-28) என்பவரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த பெண்ணை டிப்பர் வாகனம் ஒன்று மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

டிப்பர் வாகனச் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,315,316)


மஹஜன சம்பத — திகதி 2025.07.31 — சீட்டிழுப்பு இலக்கம் 5907 — Z 6 2 1 1 3 9
அத சம்பத — Z 1 1 3 9 — சீட்டிழுப்பு இலக்கம் 482 — National Lotteries Board

சுப தவசக் — திகதி 2025.07.31 — 0023 — இடபம் 04 40 41 47

தன நிதானய — திகதி - 2025.07.31 — சீட்டிழுப்பு இலக்கம் - 1937 — O 26 29 42 68 O — 76144

மெகா பவர் — திகதி 31/07/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2255 — C 13 09 28 44 62

ஜய — திகதி 2025.07.31 — சீட்டிழுப்பு இலக்கம் 0175 — Z 2 3 0 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4149 — சீட்டிழுப்பு திகதி 31.07.2025 — I 04 21 42 43 — I

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.07.31 — சீட்டிழுப்பு இலக்கம் 1216 — விருச்சிகம் 14 55 56 61 விருச்சிகம் — 37182 — 07

உத்தியோகபூர்வ முடிவுகள் — 31.07.2025 — வெற்றி வாரம் 0615 — K 1 7 5 8 1 0 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20.996.182.80 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2881 — சீட்டிழுப்பு திகதி 2025.07.31 — தினம் வியாழக்கிழமை — 03 06 11 19 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,372,882.40

சனிதா — திகதி 31.07.2025 — வெற்றி வாரம் 5042 — 59 61 73 78 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,291,707.60

சசிரி — வெற்றி வாரம் 737 — 31.07.2025 — வியாழக்கிழமை — 07 08 14 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4593 — சீட்டிழுப்பு திகதி 31.07.2025 — தினம் வியாழக்கிழமை — 04 10 32 38 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,319,251.60

கப்ருக — Z 16 26 40 63 70 — 2057 — 31.07.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.585,332,820.00

அட கோடிபதி — வியாழக்கிழமை — வெற்றி வாரம்: 2707 — சீட்டிழுப்பு திகதி: 2025.07.31 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,430,588.00 — 05 21 64 73 O


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு

நெல்லியடிப் பகுதியில் இயங்கிவரும் விநியோக நிறுவனத்தின் களஞ்சியத்தில் பணியாற்றுவதற்கு 25 வயதுக்குட்பட்ட ஆண் பணியாளர் தேவை.

- சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
- கணனி அறிவு விரும்பத்தக்கது

(1395)

**077 717 8486**



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


## முன்னாள் ...

படவுள்ளன.

அத்துடன் அவர்களின் பிரத்தியேக செயலாளர்களுக்கான கொடுப்பனவுகள், உத்தியோக பூர்வ வாகனம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளும் இரத்தாகின்றன.

அதேநேரம் அவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் இரத்துசெய்யப்படும் என்று இந்த வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


# உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்

- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-3544)



# விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது புடவை நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள ஆண் விற்பனையாளர் தேவை.

தொழில் பழக ஆர்வம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது.

(4939)

**சிவகணேசன் TEX**
41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்



## கனடா - வரி இல்லாமல்

விரைவு பொதிகள் சேவை

- 5-9 Kg 3950/-
- 11-16 Kg 2650/-
- 21-27 Kg 2470/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3544)

- UK 11Kg - 1400/-
- France 11Kg - 2220/-
- Germany 11Kg - 2000/-
- Swiss 11Kg - 2480/-
- Australia 11Kg - 2145/-
- Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்

கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237



# சிறுநீரகம் தேவை

15 வயது சிறுவனுக்கு (O+) சிறுநீரகம் மாற்ற வேண்டியுள்ளது சிறுநீரகம் தந்து உதவுபவர்கள் இருந்தால் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு (4929)

**077 070 0286**


# 9 ஆம் ஆண்டு மற்றும் 8 ஆம் ஆண்டு நினைவுகள்



அமரர் **வயிரமுத்து சிவலிங்கம்**
(ஓய்வு நிலை ஆசிரியர்)

தோற்றம் 12.05.1939
மறைவு 10.08.2016



அமரர் **சிவலிங்கம் கனகமணி**


தோற்றம் 23.11.1950
மறைவு 24.05.2017

எம் முதல் உலகம் நீங்களே, எம் இறுதி வரை – நீங்களே !
அன்பின் அடையாளம், அரவணைப்பின் மறு உருவம் – நீங்களே!
உம் மடியில் நாம் கண்டது நிம்மதி, உம் நினைவில் நாம் காண்பது அமைதி,
உம்மை எண்ணி எம் கண்கள் கலங்கினாலும்,
உம் நினைவுகள் எம் மனதில் நீங்காமல் நிலைத்திருக்கும் (1396)

குப்பிளான் தெற்கு,
ஏழாலை.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

# 9 ஆவது சிரார்த்ததின நினைவலைகள்



அமரர் **சபாரத்தினம் தர்மரத்தினம்**

(ஓய்வுநிலை சிரேஷ்ட சாலைப் பரிசோதகர் இலங்கைப் போக்குவரத்துசபை – பருத்தித்துறை)

ஆண்டுகள் ஒன்பது கடந்தாலும் என்றும்
உங்கள் நினைவுகள் ஓயவில்லை
வாழும்போது நீங்கள் செய்த காரியங்கள்
இன்றும் நினைவில் ஊஞ்சலாடுகின்றது
என்றும் உங்கள் வழியில் நாங்கள் பப்பா
உங்கள் சிந்தனைகள் செயல் வடிவம்
இன்று காணுகின்றது
உங்கள் ஆத்மா என்றும் ஆலடியான் பாதங்களில் இளைப்பாறட்டும்.

(C-3546)

தோற்றம் 13.08.1949
மறைவு 11.08.2016

கலாகேந்திரா,
அல்வாய்.

மனைவி - கலாவதி
பிள்ளைகள் - செந்தூரன், குமரன், துவாரகா
போப்பிள்ளைகள் - விக்சி, சாஸ்மி - ஆசி


# தென்னிந்திய யாத்திரை

## தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரியுடனான யாத்திரை

ஆரம்பம் : 25.08.2025 | யாத்திரிகர் : 10 | நாட்கள் : 12

**தரிசிக்கும் இடங்கள் :** உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காலகஸ்தி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவெண்ணைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 45 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதிகளையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :** இருவழி விமான ரிக்கட் மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை.

# தென்னிந்திய யாத்திரை

## இதுவரை சென்றிராத புதிய ஆலயங்கள்

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடக, தெலுங்கான மாநிலத்திற் கூடான யாத்திரை

ஆரம்பம் : 14.09.2025 | நாட்கள் : 12

அகோபிலம், 9 நரசிம்ம பெருமாள் ஸ்ரீ சைவம் (ஜோதிலிங்கம்), மந்திராலயம், ஸ்ரீராகவேந்திரா ஜீவசமாதி, ஸ்ரீரங்க பட்டினம், சிருங்கேரி, வித்தியாபீடம், சங்கராபீடம், முரட்டீஸ்வராசிவன், சோமநாதர், காளபைரவர், கொள்நூர் மூகாம்பிகை, உடுப்பி கிருஸ்ணா, தர்மசாலா மஞ்சுநாதசுவாமி, கார்த்திகேயா, மகாநதி, பெல்லூர் அன்னபூரணி, மருதமலை முருகன், ஈசா, வேறு சில ஆலயங்களையும் தரிசிக்கலாம். நேரமிருந்தால் காணலாம்.

மேலும் விபரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும் சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம். (இத்துடன் யாழ் – கொழும்பு போக வர வாகன வசதி செய்து தரப்படும்.)

"வந்தவரைக் கேளுங்கள் சென்று வரலாம் வாருங்கள்"

(1393)

தொடர்புகளுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் : ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
sriranganathan1944@gmail.com, sriranganathan2601@gmail.com
**077 768 0102, 077 736 2154**



Hari Group Of Companies
Proudly Presents

# இன்னிசை கானங்கள்




(1394)

**AUG 3RD 2025**

ஜீ தமிழ் பிரபல தொகுப்பாளினி அர்ச்சனா உடன்

அபிஜேஷ் | ஸ்ரீமதி | ஹேமித்ரா | தினேஷ் | மஹதி | ஹர்ஷினி | தியா நயன் | புவனேஷ்

மற்றும் ஜீ தமிழ் புகழ் சதீஷ் இசைக்குழு

**6 PM ONWARDS**

ARIYALAI COMMUNITY CENTRE GROUND

TICKETS AVAILABLE ON

- HARI AIR TRAVEL — 68I, HOSPITAL RD, JAFFNA
- HARI ENGINEERING — PUTHUTHODAM, ALVAI SOUTH, NELLIYADY
- JEEVAN PHARMACY — DR SUBRAMANIAM RD, CHUNNAKAM
- TOP SILK — NO 17A, K.K.S RD, MARUTHANARMADAM
- E-MOBILE SHOP — MAIN STREET, NELLIADY
- SINGHAGIRI — NO 1 STANLEY RD, JAFFNA

ONLINE TICKETS AVAILABLE ON bookmyshow

| GOLDEN PASS | SILVER PASS | BRONZE PASS | NORMAL PASS |
|---|---|---|---|
| 5000/= | 3000/= | 2000/= | 1000/= |

(PHYSICAL TICKETS ONLY)

Silver Sponsor | Official Hospitality Partner | Official Photography & Videography Partner | Official Digital Media Partner | Official Makeup Partner | Official Website Partner | Official Printing Partner

SUXUS WEAR | MANGO HARSHOW | AGARAM STUDIO | LANKASRI | FIONA | SAKSITV | saravana PRESS

076 148 6461 | 076 148 6462

EVENT MANAGEMENT BY NARMATHAN | NAREEN CREATIONS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.